KALANILAYAM

தனிப்பிரதி விலை 0-2-6 அணு.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ஸு மே மீ 9 உ [No. 19

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 289
2. ஒத்தெல்லோ (அங்கம் 2. களம் 3.) Shakespeare's "Othello" 291
3. நரவாகன தத்த சரிதம் S. சோமசுந்திர தேசிகர் 293
4. சூரியன் (இடைநிலைக் கோள்கள் - வியாழன்) E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A., L.T., 295
5. நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 7-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 297
6. வில்லிபாரதம் (வீமார்ச்சுனர்) K. T. விஜயராகவாச்சாரியார் B. A. 299
7. கம்பராமாயணம் (கிட்கிந்தைப் படலம்) T. N. சேஷாசலம் B.A., B. L., 302
8. வர்த்தமானம் 304

க லா நி ல ய ம்

இசையின் அசைவு.

நம்மைச் சூழ்ந்திருக்கின்ற இந்தப்பிரபஞ்சமானது ஓயாமல் நமக்கு உரைத்துவருகின்ற வதந்தியைச் செவிநனி யேற்று, "ஆம், கேட்டேன், ஒவ்வினேன்" என்னும் அவினயந் தோன்ற வாழ்வதே வாழ்க்கையின் அமைதியாம் என்ன முன்னைய கட்டுரைகளில் காட்டியிருப்பதைக் கருத்திற்கொண்டு சிந்தனை செய்திடமுயன்றவர்க்கு இரண்டொரு சங்கைகள் இடையிடையே தோன்றலாம். அன்ன சங்கைகளின் அமைதியினைச் சிறிதிங்கு ஆராய்வோம்.

"இயற்கை விதிகள்" என்று இயம்பப் பெறுகின்ற சிலவற்றால் இயக்கப்பெறுகின்றது இப்பிரபஞ்சம் என்பது உலகறிந்ததொன்று. மேலேஎறிந்த கல்லொன்று கீழே விழுந்துதான் தீர்தல்வேண்டும் என்பதுமுதல், அவரவாது கர்மத்தை அவரவர் அனுபவித்துத்தான் தீரவேண்டு மென்பது வரையில், பற்பல சாத்திரங்கள் பற்பல விதிகளை வகுத்துக் காட்டும். இவை பிரபஞ்ச விதிகள் என்பார். இவைகளைக் கடத்தல் அரிது என்பார். இவைகளால் கட்டுண்டிருக்கின்றது இம்மண்ணுலகவாழ்க்கை என்பார். மற்று, இவைகளின் உண்மையையேனும் மெய்ம்மையையேனும் சோதித்தல் இங்கு எம்கருத்தன்று. இயற்கைவிதிகளென்று அழைக்கப்படும் இவைகளுக்கும், இவைகளை ஏற்றுக்கொள்கின்ற மானுட மனத்திற்கும் உள்ள தொடர்பினை உணர்ந்துகொள்ள முயல்வோர்க்கு உதவியாம் பொருட்டே இக்கட்டுரை வரையப்பெறுகின்றது.

பிரபஞ்சத்தில் காணப்படும் பொருள்களையேனும் அப்பொருள்களினால் நிகழும் நிகழ்ச்சிகளையேனும் சார்ந்தேயல்லது, இயற்கை விதிகள் என்று அழைக்கப்பெறுவனவற்றுள் எதுவும் நிலைநிற்கவும் நடைபெறவும் இயல்வதில்லை என்பது வெளிப்படை. இப்பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் உட்கொள்ளற்கு 'மனம்' என்பதொன்று இல்லையாயின், பின் உலகு உலகாதி விஷயங்கள்தாம் உளவோ, அல்லது அனைத்துமே வெறும் சூனியந்தானோ வென்பது தத்துவ ஆராய்ச்சியாளர் இடையே முடிவின்றி நடந்துவருகின்ற ஒரு வழக்காம் என்பதையும் எல்லோரும் அறிவார். எது எவ்வாறாயினும், உட்கொள்ள மனமும் அம்மனத்திற்குப் பொருளாக விஷயங்களும் இருக்குமொரு தோற்றத்திற்கிடையேதான் நாம் வாழ்கின்றோமாதலால் அந்நிலையினை யேற்றுக்கொண்டு அதற்கு மேல் நமது சிந்தனையைச் செலுத்துவதொன்றே முறைமையாகும். அன்னவாறு செலுத்துங்கால் வெளிப்படுகின்ற முக்கியமான சில செய்திகள் உள. கணித நூற்புலமைசான்ற ஈன்ஸ்டின் (Einstein) என்பவர் எய்தியுள்ள அரிய முடிவுகள் இத்திறத்திற் சால உதவியாக நிற்கும். அம்முடிவுகளை நுனித்துணர்ந்து நோக்குங்கால், இயற்கைவிதிகளெனும் இவை, நாம் பார்த்தவுடனே படித்துக்கொள்ளும்படி பிரபஞ்சத்தின் முதுகில் பரக்க எழுதிவைத்திருக்கின்ற ஆக்கினைகள் அல்லவென்பது தெரிகின்றது. மற்று அவை

தாம், நம் மனமானது தன்முன்னே தென்படுகின்ற உண்மைகளை ஒரொழுங்குமுறையுள் அடக்குவதற்குதவியாகின்ற குறிப்புக்களேயாம். அவனவன் கர்மத்தை அவனவனே அனுபவித்துத் தீரவேண்டும் என்னுமவ்விதி நூல்களில்கூறப்பட்டிருக்கின்றதெனினும் அதுதான் பிரபஞ்சத்தின் இயற்கைவிதி யாகுமென்பதைஇப்பிரபஞ்சமே தன்மேல் எழுதிக்காட்டுகின்றதென்ன எண்ணுவதற்கு ஆதாரமில்லையென்பதுவும் உண்மையே. ஆயினும், கருமபலத்தின் கணக்கைக் கொண்டுதான் இப்பிரபஞ்சநிகழ்ச்சிகளில் ஒருஒழுங்கையும் முறையையும் காணக்கூடியவர்களாயிருக்கின்றோம். இப்படித் தன்னைக் காட்டிக்கொள்வது இப்பிரபஞ்சத்தின் இயற்கையோ, அல்லது அதனை அன்னவாறு காண்பது நம் மனத்தின் இயற்கையேயோ என்னஐயுற்றுவினவுங்கால்,இவ்விரண்டின் இயற்கைகளும் கலந்து பிறந்ததொரு கருத்தே அவ்விதிக்கு நிலைக்களமாம் என்று கூறலாம். நமக்குப் புறத்தேயுள்ள பொருள்களை நாம் நமது புலன்களின் வாயிலாகக் கருத்துட்கொள்ளும்போது, (நாம் உருச்செய்துகொள்கின்ற மானதசித்திரங்கள், அவை அணுக்களின் சித்திரமேயாயினும் அல்லது அண்டங்களின் சித்திரமேயாயினும்) கண்ணடி காட்டும் பிரதிபிம்பங்கள்போல், நேருக்கு நேர் அப்பொருள்களோடு முற்றிலும் ஒத்திருக்கின்ற சித்திரங்கள் அல்ல. புலன்களின் வழியாக நம் மனம் புறவுலகப் பொருள்களைப் பற்றிப் பதிவுசெய்துகொள்ளுகின்ற கருத்துக்களை, "அபிப்பிராயங்கள்" என்றே ப்ளேட்டோ அழைப்பார். ஏனெனில் இப்பொருள்கள் நம் மனத்தினுள் புகுகின்றபோது அம்மனமானது அப்பொருள்களைப் பற்றித் தான் கொள்ளவேண்டிய கருத்தை ஒருவாறு கற்பனைசெய்து அமைத்துக்கொள்கிறது. ஆயினும், அதனின்று, புறவுலகவிடயங்கள் அனைத்துமே நம் மனத்தின் கற்பனையேயாம் என்று எண்ணிவிட லாகாது. மற்று, புறவுலகவிடயங்களைப்பற்றி நாம் சிந்தித்து அமைத்துக்கொள்கின்ற சித்திரங்களும், அவைகளினின்று நாம் கண்டு தெரிவிக்கும் கருத்துக்களும், நம்முடைய மன இயற்கையின் விளம்பரங்களேஎன்பதையும் மறுக்கலாகாது. நாமும் பிரபஞ்சத்தின் ஒரு பாகமாக இருக்கின்றோம் என்னும் அளவினிற்றான் அவை பிரபஞ்ச இயற்கையைப்பற்றிய விளம்பரங்கள் ஆகக்கூடும். பிரபஞ்சம் இருக்குமாறு இருக்கின்றநிலைவேறு; அது நம்மனத்தூடுபுகுந்து வெளிவரும்போது தன்னை விளம்பிக்கொள்கின்ற வகை முற்றிலும் வேறு. நம்மோடு தொடர்புபடும்போதுதான் இப்பிரபஞ்சம் பொருளும் சுவையும் அடைவதாகின்றது. இதனைத்தெளிந்துகொள்வதற்குஉதவியாம்படி ஓர் உதாரணங் கூறுவோம்.

பாட்டுப்புத்தகங்கள் பல இருக்கின்றன. அதனில் வெள்ளைக்காகிதத்தின்மேல் கருப்புஎழுத்துக்களால் 'சுவரங்கள்' என அச்சிட்டிருக்கக் காண்கின்றோம். காகிதத்தின்மேல்இருக்கும் இந்தச்சுவரங்களைக்கண்களால் படிக்கும்போது காண்கின்ற அதன் உருவங்களின் தோற்றத்திற்கும், அதனையே இசைப்புலவன் ஒருவன் வீணையில் வாசிக்கும்பொழுது கேட்கின்ற இசைக்கும் இடையே கிடக்கின்ற வேற்றுமை எத்தகையது என்பதை இயம்புவதும் மிகை. ஆயினும் எழுத்திற் கண்டஅச்சுவரங்கள் தாம் வீணையின்வழியாக இயங்கிவரும்பொழுது இப்படி இசைபெற்றுப் பேசின என்பதும் பொருந்தும். செவிக்குரியமொழிகளால் பேசுமொன்றைக் கண்ணிற் கமைந்த குறிகளால் தெரிவிப்பனவாம் அச்சுவரங்கள். அச்சடித்த எழுத்துக்களாகஇடத்தைஅடைத்துநிற்பனவாம்அவைகளேசுவரங்களாக இசைக்கப்படும்போது,காலத்தின் இயற்கையுள் கலந்துகொள்கின்றன. சங்கிதத்தின் இனிமையெல்லாம் காலஅளவைக் கையாளும் நயத்திற்றான் உள்ளதென்பதை அறியாதவர் மிகச் சிலர். கலைகள் எனத்தக்க எவையும் காலத்தில் நிலைத்திருப்பனவேயன்றி இடத்தை நிறைத்துக்கொண்டிருப்பனவல்ல. இசைக்கலையும் அன்னதே. நம் மனத்தைஇட உணர்ச்சியினின்று பெயர்த்து,காலவுணர்ச்சியில் நிலைக்கச் செய்வதால், நிலையில்லா உடல்வாழ்க்கையில் உழலாமல் நிரந்தரமாகிய ஆன்ம வாழ்க்கையின் நன்னிலையே எய்துவோம் என்னுமெய்ம்மையை உணர்ந்திருந்த வித்தகர்கள் அனைவரும், காலத்தில் நம் சித்தத்தைக் கலக்கவைக்கின்ற இசைப்பயிற்சியினது அவசியத்தை எந்நாட்டிலும் எக்காலத்திலுங் கொண்டாடியிருக்கின்றனர். இடத்தின் சிறு செய்திகளைக் காலத்தின் சுவையாகச் செம்மை செய்துதருவது அது. பிரபஞ்சத்தின் மெய்ம்மை, இடத்தினுள் அது கிடக்கின்ற ஒரு தன்மையில்அதிகம் காண்பதற்கில்லை; காலத்தில் அது நடக்கின்ற தன்மையிற்றான் காணல்வேண்டும். வானசாஸ்திரங்களும் பூதசாஸ்திரங்களும், அவைகளின் விதி வாய்பாடு அளவை முதலியவைகளும்,அவைகளை விளக்குவதற்குவரைந்துகொள்கிற சித்திரப்படங்களும் மெய்ம்மையை நாம் மனத்தினில் இனிதுகொண்டு மகிழ்ந்திடற்கு ஆதாரமாகஅமையக்கூடியகுறிகளேயன்றி,அவைகளே தாம் மெய்ம்மையெனத் தக்கனவல்ல. செவிமடுத்து இன்புறுகின்ற இசைக்கும் அதனைக் குறித்துக் காட்டும் சுவரங்களுக்கும் உள்ள வேற்றுமை, இப்பிரபஞ்சம் தன்னளவாய் நிற்கின்ற நிலைக்கும் அது நம் மனத்துடன் சேர்கின்றபோது நேர்கின்றநீர்மைக்குமிடையே உளது. இசையை அசையாதது ஆக்கிவிட்டால் அது எப்படிச் சுவையும் பயனும்அற்றதாகிவிடுகின்றதோ, அப்படியே, இப்பிரபஞ்சத்தின் செலவைச் சிந்தியாமல் அதன் இருக்கையையேகொண்டு விவகரிப்பதும் இப்பிரபஞ்சத்தை நமக்கும் நமக்கு இப்பிரபஞ்சத்தையும் வீணாக்கிவிடும்.

இயற்கை விதிகள் என்னப்படுவன, சங்கீதத்தை அமைத்துக்கொள்வதற்குக் குறிகள் இவையெனக் காட்டி யெழுதியுள்ள சுவரங்களைப்போல, இப்பிரபஞ்சத்தை நாம் நமக்காகச் சிருஷ்டித்துக்கொள்ள வேண்டும்போது அதற்கு உதவியாகவல்ல குறிகளாயமைந்திருக்கின்றன. பிரபஞ்சத்தை நமக்காகச் சிருஷ்டித்துக்கொள்வது என்னும் இவ்வாக்கியம் நன்கு சிந்தித்தற் குரியது. பிரபஞ்சப் பொருள்களும் இயற்

கை விதிகளும், நம்மனத்தினுள் சேர்ந்து மீண்டும் கருத்தின் உருவமாக வெளியேவரும்பொழுதுதான் நமக்குப் பிரபஞ்சமென்பது ஒன்று உண்டாகின்றதாதலின் அங்ஙனம் கூறினோம். அதுவரையில் நமக்குப் பிரபஞ்சமில்லை. அதன்மேல், நமக்கு நாமே எவ்வகைப் பிரபஞ்சத்தை சிருஷ்டித்துக்கொள்கின்றோமென்பதும் நம்முடைய கைகளிலேயே இருக்கின்றது. சுவரப்படுத்தியெழுதியிருக்கின்ற பாட்டுப் புத்தகங்கள் கிடைத்தால் போதாது; அதனின்று இன்பம் பிறப்பது இசைப் புலவனது திறமையையே நன்கு பொருந்தியிருக்கின்றது! திறமை என்னும் அதுவும் பெரும்பாலும் பயிற்சியால் வருவதேயாம்.

பிரபஞ்சக் கிடக்கையைப் பிரபஞ்ச கீதமாக மாற்றித் தானும் தன்னைச் சூழ்ந்துள்ளோரும் இன்புறும்படி வாழ்க்கையை இசைக்கவல்ல பயிற்சி தருவன அருமைமிகுகாவியங்களேயாதலின், இக்கலாநிலயம், காவியத்தேர்ச்சியில் தம் சிந்தனையைச் செலுத்துதற்கிசைந்து முயலும்படி எல்லோரையும் வாரந்தோறு வருந்தியழைத்துவருகின்றது. இம்முயற்சி கைவந்து இலக்கியப்பயிற்சி பெருகப்பெருக, இந்தப் பிரபஞ்சமானது, நிலக்குழிகளிலும் கடலிலும் நெருப்பாலும் விஷக்காற்றாலும் ஆகாயக்கப்பலிலும் போரிடற்கே ஐம்பெரும் பூதங்களினால் அமைந்தவோர் இரத்தக்களமாகவும், ஐம்பொறிகளாலும் வஞ்சித்து நடத்த வேண்டியதாம் ஒரு வர்த்தகக் கடைத்தெருவாகவும், இன்னலுக்கே யாவரையும் இரையாக்கித் தீர்கின்ற இடும்பைக் கிடும்பையாய் முடியாமல், சொல்லரிய நெறியை நற்பெருங் கடவுள் நமக்கு உணர்த்துகின்ற ஒரு சொல்லாலே பேசிய நல்ல நல்ல மிக நல்ல வதந்தியே யாகுமன்றே!

ஒத்தெல்லோ

["Shakespeare's —"Othello"]

[279-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 2. களம் 3.

இடம்:—மாளிகையில் ஓர் மண்டபம்.

ஒத்தெல்லோவும், டெஸ்டிமோனாவும், காஸ்ஸியோவும் சில ஏவலாளர்களுடன் வருகின்றனர்.

ஒத்தெல்லோ:—நல்ல மைக்கேல்[1], காவலை இவ்விரவு கவனித்துக்கொள் நீ. அறிவைக் கடந்து விளையாடாமல், மாண்பமைந்த அந் நிறையினை நமக்கு நாமே கற்பித்துக்கொள்வோம்[2].

காஸ்ஸியோ:—யாது செய்தல் வேண்டுமென்பது இயாகோவிற்குச் சொல்லப்பட்டிருக்கின்றது; ஆயினும், இருந்தபோதிலும், நானே என்னுடைய கண்களால் அதனைக் கவனிப்பேன்[3].

ஒத்தே:—இயாகோ மிக்க யோக்கியன்[4]. மைக்கேல், நல்லிரவு உனக்கு; நாளை நின் முந்தியவைகளுடன், உன்னுடன் நான் பேசவேண்டும்[5]. (டெஸ்டிமோனாவைப் பார்த்து) எனதருமை அன்பே, வா. (காஸ்ஸியோவைப் பார்த்து) நல்லிரவு.

[ஒத்தெல்லோவும் டெஸ்டிமோனாவும் ஏவலாளர்களும் போகின்றனர்.]

[இயாகோ வருகின்றான்]

காஸ்ஸி:—வருக, இயாகோ: நாம் காவலிற்குச் செல்லவேண்டும்.

இயா:—இதற்குள்ளாக இல்லை[6]; அடுத்த அதிகாரியே, இன்னும் மணி பத்தாகவில்லை. தன் டெஸ்டிமோனாவின் காதலுக்காக நம்மை இவ்வளவு முந்தியே தள்ளிவிட்டார், நம் தளகர்த்தர்[7]; அதுபற்றி அவரை நாம் யாதுங் குற்றங் கூறவேண்டா[8].

(1) காஸ்ஸியோவின் முழுப் பெயர், "மைக்கேல் காஸ்ஸியோ"வென்பதாம். இவ்விரண்டில், முதலில் நிற்கின்ற 'மைக்கேல்' என்பது கிறிஸ்தவப் பெயர் என்றும், பின்வருகின்ற 'காஸ்ஸியோ' என்பது குடும்பப் பெயரென்றும் கொள்ளப்படும். நெருங்கிய உறவினரும், தொடர்ந்த நட்பில் மிகுந்தவருந் தவிர ஏனையோர், ஒருவனை அவன் கிறிஸ்தவப் பெயரால் மாத்திரம் அழைப்பது மரபன்று. ஒத்தெலோ இங்கு காஸ்ஸியோவை அவன் கிறிஸ்தவப் பெயர்கொண் டழைப்பது, காஸ்ஸியோவை இவன் மிக்க அன்புடன் நெருங்கிய உறவினன்போல் பாராட்டுகின்ற அருமையைக் காட்டி, அன்னவனிடத்தில் ஒத்தெல்லோ பகைகொள்ளும்படி செய்த இயாகோவின் கொடுமையைக் குறித்து நிற்கின்றது.

(2) நிறை, என்பது, மனத்தை அதன் போக்கின்படி விட்டுவிடாமல் மிதமான அளவில் நிறுத்திக்கொள்ளுங் குணம். இந்தக் குணம் மாண்பிற்கு அடையாளம். இவ்விரவு நடைபெறுகின்ற கொண்டாட்டத்தில் களிப்பின் மிகுதியால் அறிவைக் கடந்து விளையாடி நம் கடமையை மறக்காமல், பிறர் வற்புறுத்தலின்றியே, நாமே மிதமாக இருப்போம்—என்பது பொருள்.

(3) செய்யவேண்டியதை இயாகோவிற்கு உத்தரவிட்டிருக்கின்றேனாயினும் நானும் சென்று நேராகக் கவனிப்பேன்—என்பது பொருள்.

(4) பொறாமை வஞ்சனை கொடுமை அனைத்திற்கும் உறைவிடமாகிய இந்த இயாகோ, தான் யோக்கியனென்றே கருதி எல்லோரும் வாய்விட்டுப் பாராட்டும்படி நடிக்குந் திறமை வெறுப்புடன் கலந்த வியப்பைத் தரக்கூடியதாக நிற்கின்றது.

(5) நல்லிரவு உனக்கு = இரவில் வந்தனம்கூறி விடை பெற்றுக்கொள்கின்ற ஆங்கில மரபு இது.

நாளை...பேசவேண்டும் = நாளைக் காலையில் நீ முதல் முதல் செய்ய நினைத்திருப்பவைகளில், என்னை வந்து காண்பதை ஒன்றாகக்கொள்; நான் உன்னிடம் சில சொல்வதற் கிருக்கின்றது. அதாவது, பொழுது விடிந்தவுடன் நானிருக்கும் இடத்திற்கு வா—என்பது பொருள்.

(6) இதற்குள்ளாகப் போகவேண்டா—என்பது பொருள்.

(7) டெஸ்டிமோனாவுடன் தான் பள்ளிகொள்ளச் செல்லும்பொருட்டு நம்மை இவ்வளவு விரைவில் ஒத்தெல்லோ அனுப்பிவிட்டானேயல்லது நாம் களியாட்டங்களை முடித்துக்கொண்டு காவலுக்குப் போகவேண்டிய வேளை இன்னும் வரவில்லை—என்பது பொருள்.

(8) மனைவியுடன்புதுமணப்பள்ளி மேவவேண்டும் என்னும் ஆவல்கொள்வது இயற்கையே யாதலால், நம்மை அவன் இவ்வளவு விரைவிலனுப்பிவிட்டதுபற்றிக் குறை காணலாகாது—என்று பரிகாசமாகக் கூறுகின்றான்.

காஸ்ஸி:—மிகவும் சிரேஷ்டமான பெருமாட்டி அவள்.

இயா:—நான் உத்தரவாதம் அவளுக்கு; விளையாட்டும் நிறைந்தவள்[9].

காஸ்.—மாருப் புதுமையும் மெல்லிய இயல்பும் வாய்ந்தவொரு பிராணியே அவள்!

இயா:—என்ன கண்கள் உடையாள் அவள்! கதத்தினிற்கு அது அமைதி முரல்கின்றதென நினைக்கின்றேன்[10].

காஸ்:— வசியமுடைய கண்களே; ஆயினும் நேரான அடக்கமுள்ளவை என நினைக்கின்றேன்[11].

இயா:— அவள் பேசும்பொழுது, காதலுக்குக் கதமென எழுப்பித் தூண்டுவதல்லவா, அது[12]?

காஸ்:—சிரேஷ்டமே அவள், மெய்![13]

இயா:—நன்று, அவர்களுக்கு இன்பம் பெருகட்டும்[14]! அடுத்த அதிகாரியே, வா, ஒயின் சாடி வைத்திருக்கின்றேன்; கரிய ஒத்தெல்லோவின் சுகத்திற்காக ஓரளவு பருகுதற்கு விரும்புகின்ற ஸைப்ரஸ் காளையர் இருவர் இங்குவெளியே இருக்கின்றனர்[15].

காஸ்:—இவ்விரவு இல்லை, நல்ல இயாகோ. குடிக்கக் கலங்கும் ஏழை மூளை என்னுடையது[16]. உபசரணைசெய்வதற்கு வினயமானது வேறு ஏதேனும் வழக்கத்தைக் கண்டுபிடித்திருத்தலாகாதா வென்று நான் நனி விரும்புகின்றேன்[17].

இயா:—ஓ, அவர் நம் நண்பர்கள்; ஓரே வள்ளம்; உனக்காக நான் குடிப்பேன்[18].

காஸ்:—இவ்விரவு ஓரே வள்ளந்தான் குடித்திருக்கின்றேன் நான்[19]; அதுவுந் தந்திரமாய்த் தணிக்கப்பட்டது; ஆயினும், அது என்ன விபரிதம் இங்குப் புரிகின்றது, பார்[20]. இந்தக் குற்றத்திற்கு நான் பாக்கியம் குறைந்தவனாக இருக்கின்றேன்; ஆதலின், இச் சவலையின்மீது இன்னுஞ் சுமத்தி வருத்த நான் துணியமாட்டேன்[21].

இயா:—என்ன ஐயா! களியாட்டிரவு இது: இக் காளையரும் இதனை விரும்புகின்றனர்.

காஸ்:—எங்கு இருக்கின்றனர் அவர்?

இயா:—இங்கு வாயிற்கதவினருகு; வேண்டிக் கொள்கின்றேன், அவர்களை உள்ளே அழை.

காஸ்:–செய்கின்றேன்; ஆயினும் எனக்கு வெறுப்பாக இருக்கின்றது அது.

[காஸ்ஸியோ போகின்றான்.]

இயா:—இவ்விரவு இவன் முன்னரே குடித்திருப்பதோடு இன்னும் ஓரே வள்ளம் நான் இவன்மீது

(9) பெருமாட்டி யென்ற காரணத்தால் நாம் விலகித்தான் நிற்கவேண்டுமென்ற அவசியமில்லை. விளையாட்டுக் கழைப்பவர்களுடன்விளையாடவிரும்புபவளுமாவாள், என்பதற்கு நான் உத்திரவாதம்—என்று இயாகோ குறும்பாகவும் குறிப்பாகவும் கூறுகின்றான்.

(10) கதம் - மூண்டெழுங் கோபம். முரலல் - சங்கு முதலியன ஒலித்தல். கதமுடன் எழுகின்ற போரினிடையே, ஒருதிறத்தவர் சமாதானம் பேச விழைபவர் ஆயின் அந்தக் கருத்தைத் தம் சங்கு தாரை முதலிய வாத்திய ஒலிகளினால் குறித்துக்காட்ட மறுதிறத்தோர் போரை நிறுத்தி அமைதியாக்குவார். இந்தப் போர்க்களச் செய்தியைச் சார்ந்து டெஸ்டிமோனாவின் கண்களை உருவகப்படுத்திப் பேசுகிறான் இயாகோ. "பெண்டகையார்ப் பேரமர்க்கட்டு" என்று கூறியுள்ளபடி, டெஸ்டிமோனாவின் கண்கள், ஆடவர் மனத்தை அழிக்கப் போர் புரிவன. ஆயினும் அப்போரினிடையே அவர்களுடன் சமாதானம் செய்துகொள்ளவிரும்பும் குறிப்பினையுங்காட்டிக் காமத்திற்குஅவள் இணங்கிநிற்கும் நினைவையும்தெரிவிக்கின்றன. "இருநோக்கு இவள் உண்கண் உள்ளது ஒரு நோக்கு நோய் நோக்கு ஒன்று அந்நோய் மருந்து" என்னுங் குறளினைப் பெரும்பாலுந் தழுவியுளது இயாகோவின் இவ் வாசகம். இவள் கண்கள் காமவேட்கையை மூட்டி, பிறகு இவள் அதற்குடன்பட இசைகின்றாள் என்பதையுந்தெரிவிக்கும், என்பது இதன்பொருள். (கதம் என்பது மூண்டெழுங் கோபத்தையே குறிக்குமாயினும், இங்கு, கோபம்போன்ற மற்றொரு மனோவிகாரமாகிய காமத்தை உட்கொண்டு நிற்கின்றது.

(11) அவள் கண்கள் தம் அழகினால் பார்ப்பவர் மனதைக் கவரக்கூடியனவென்பது உண்மையே. ஆயினும் அடக்கமின்றி ஒழுக்கம் பிறழ்தற்கு அழைக்கின்ற குறிப்பொன்றும் அவைகளில் இல்லை—என்பது பொருள்.

(12) அவள்பேசும் இனிமையானது, மற்றவரை அவள்பால் காதல்கொள்ளும்படி தூண்டத்தக்கதல்லவா—என்பது பொருள்.

(13) இயாகோ,காமுகனுக்குரியசொற்களால்பேச,காஸ்ஸியோ ஒருமேன்மகளுக்குரியநன்மதிப்போடுஅவளைப்பாராட்டும்வேற்றுமை இங்குக் குறித்துக்கொள்ளத்தக்கது.

(14) ஒத்தெல்லோவையும் டெஸ்டிமோனாவையும் இயாகோ வாழ்த்து மிது வஞ்சனையே.

(15) காஸ்ஸியோ குடிவெறி கொள்ளும்படி செய்யப் பார்க்கின்றான் இயாகோ. ஸைப்ரஸ்தீவின் வாசிகளான இளைஞர் இருவர் நம்மோடு சேர்ந்து உண்டாடும் விருப்பினராக வந்துளர்,என்கின்றான். "ஒருவனுடைய சுகத்திற்காகக் குடிப்பது" என்பது மேனாட்டுவழக்கம்.

(16) சிறிது குடித்தாலும் என் மூளை மிக விரைவில் கலங்கிவிடுகின்றது—என்பது பொருள்.

(17) மதுவூட்டி விருந்ினரை உபசரிப்பதை வினயமாகக் கொண்டாடும் வழக்கமாவதன்றி வேறு வகையில் அவ்வினயத்தைக் காட்டக் கற்றிருத்தலாகாதா—என்பது பொருள்.

(18) நம் நண்பர்களாதலால் அவர்விருப்பத்தை மறுக்கலாகாது. ஒப்புக்கு நீ அவர்களுடன் சேர்ந்து ஒருவள்ளம் குடித்தாற்போதும். பிறகு, உனக்குப்பதிலாக நான்குடிக்கின்றேன்-என்பது பொருள். (வள்ளம் - கிண்ணம்)

(19) நான் குடித்த ஒருவள்ளம் ஒயினும், பிறருக்குத் தெரியாமல் நீருடன் கலந்து வேகம் தணிக்கப்பட்டது—என்பது பொருள். ஒயினின் வேகத்தைத் தாங்கமாட்டாமை ஆண்மைக்கு அழகன்று என்று இகழப்படுமாதலால், காஸ்ஸியோ பிறர் அறியாதபடி நீர் கலந்து அதன் வேகத்தைத் தணித்திருக்கிறான்.

(20) என் மூளை எவ்வளவு கலங்கியிருக்கின்றது பார், என்று தன் தலையைத் தொட்டுக் காட்டியிருப்பான்.

(21) எவ்வளவு குடித்தாலும் தாங்கக்கூடிய பாக்கியம் எனக்கு இல்லையாகையால், குடிக்கும் வன்மையற்றநான் இன்னும்குடிக்கத் துணியமாட்டேன்—என்பதுபொருள். (சவலை - பலமின்மை)

(22) இன்னும் ஒரு கிண்ணம் ஒயின் நான் இவனைக் குடிக்கச்செய்துவிடுவேனானால், பிறகு இவன் மிகஎளிதில் கோபமூட்டப் பெற்றுச் சண்டையும் கலகமும் செய்பவனாவான்—என்பது பொருள்.

மாதர்தம் மடியில் வளர்கின்ற நாய்கள்கண்டவர்களோடெல்லாம் குலைத்துக் குலைத்துச் சண்டைக்குப்போவது போல் இவனும் செய்வான்.

கட்டிவிடுவேனானல், இளைய வென் பெருமாட்டியின் நாயேபோல், இவன் சண்டையும் கோபமும் நிறைந் தவனுவான்[22]. இனி, நோயுற்ற என் மடையன் ராடரிகோ, காமத்தால் தன் தப்பான பக்கம் வெளியே திருப்பப்பெற்றிருப்பவன்[23], இவ்விரவு, டெஸ்டிமோனுவின்பொருட்டுக் குவளையின் ஆழம் குடித் துக் குடித்துக் களியாடியிருக்கின்றான்[24]. காவல்புரிய வேண்டியவன் இவன்—சைப்ரஸ்ஸின் இளைஞர் மூவர்–உயர் குலத்தினர், ஓங்கும் ஊக்கத்தினர், தம் மானத்தைத் தகுந்த தூரத்தில் நிறுத்திவைத்திருப் பவர்[25], போர்வல்ல இத்தீவின் சாரமேயானவர்[26], இவர்களை யான் இவ்விரவு பெருகும் வள்ளங்களால் குழப்பியிருக்கின்றேன்; இவர்களும் காவல்புரிகின்றனர். இப்பொழுது, இக்குடிகாரர் மந்தைக்கிடையே, இத்தீவினிற்குக் கோபமுண்டாக்கக் கூடிய வொரு செய்கையில் நம் காஸ்ஸியோவைச் சேர்க்கவேண்டியவனுக இருக்கின்றேன் யான் — மற்று, இதோ வருகின்றனர் அவர். இதன் முடிவு என் கனவினை அங்கிகரிக்குமாயின், என் படகானது காற்ருேடும் ஆற்ருேடும் இடையூறின்றிப் படர்வதாகின்றது.[27]

பெருமாட்டி, என்பது இங்கு டெஸ்டிமோனுவை யேனும், அல்லது, பொதுவாகச் செல்வமுடைய மாதர்களையேனுங் குறிக்கலாம். டெஸ்டிமோனு நாய் ஒன்று வளர்க்குஞ் செய்தி வேறெங்குந் தெரியவில்லை.

(23) காமவெறியினுல் கலக்கமுற்று, நேராக ஒன்றுமே செய்யமாட்டாமல் தீர்ந்துவிட்டவன்—என்பது பொருள்.

(24) குவளை - வாயகன்றபாத்திரம். குவளையின் ஆழம் குடிப்பது - முழுக்குவளையும் எஞ்சாமல் குடித்துவிடுவது. டெஸ்டிமோனுவின் பொருட்டு - டெஸ்டிமோனுவின்மீது தான் கொண்ட காமத்தினுல் அவளுடைய சுகத்திற்காகவும் பெருமைக்காகவும்.

(25) தம் மானத்திற்கு யாரேனும் சிந்தனைபுரிவாரோவென்று மிகவும் சாக்கிரதையாகப் பார்த்துக்கொண்டு, அதற்கு ஊனம் நேராமல் காத்துக்கொள்பவர். தம்மை நிந்தித்தார்களோ என்றமானத்தால் யாரிடத்தும் மிக விரைவிற் கோபங்கொள்பவர்—என்பது பொருள்.

(26) சண்டைச்சரவு மிக்க இத்தீவினர் குணங்களின் ஸாரத்தையெல்லாம் இம் மூவர்களினிடத்தில் காணலாம்- என்பது பொருள்.

(27) கனவு என்பது, இயாகோ மற்றவர்களைக்கெடுக்க வேண்டுமென்று கொண்டிருக்கின்ற ஆசையைக் குறிக்கின்றது. முடிவு = இப்பொழுது கலகம் விளைவிக்குங் காரியம். என் ஆசை நிறைவேறுவதற்கு இருந்தால் இப்பொழுது இக்கலகம், நான் எண்ணிச்சூழ்கின்றபடி கைகூடும். படகு, என்பது தான் மேற்கொண்ட காரியத்திற்கு உருவகமாக நிற்கின்றது. காற்றும் ஆற்றின் ஓட்டமும் செம்மையாக இருக்கும்போது இடையூறின்றிச் செல்லும் படகுபோல், நான் சூழ்கின்ற வஞ்சனையும், இக்கலகம் மாத்திரம் இப்பொழுது விளையுமானுல் பிறகு, தடையின்றி நடைபெற்று என் ஆசையின்படியே முடியும்— என்பது பொருள்.

நரவாகன தத்த சரிதம்

[283-வது பக்கத் தொடர்ச்சி]

VI. அஜிநாவதீலாபம்

நரவாகனன் காந்தர்வதத்தையோடு சம்பாநகரத்தில் சுகமாகக் காலங்கழித்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் வித்திஸாகர அரசனை சௌரிமுண்டனது சகோதரனை விகசிகன் என்பான் அவ்விடம் தோன்றினன். அவனை வரவேற்றுக் காந்தர்வதத்தை உபசரித்தாள். அச்செய்கை நரவாகனனுக்குப் பிடிக்கவில்லை. இந்த விகசிகன் பெரிய மாயவித்தைக் காரனென்றும் இவன் பூதவிரதம் செய்யப்போகிருனென்றும், அதை முடித்துவிட்டால் பகைவரால் வெல்ல முடியாதபடி அவ்வளவு பலமுடையவனுவானென்றும், அதனைத் தடுப்பதற்கு வழி, அவன் இப்பொழுது அநுஷ்டித்துவரும் கௌரிவிரதத்தில் அவனை உபசரித்துக் கௌரியை வழிபட்டால் அவள் வரமொன்று கொடுப்பாள் என்றும் கூறினள். அந்த வரத்தால் விகசிகனது கெடுதியை மாற்றுதல்கூடும் என்றும், தான் அந்தப்படி செய்து அவனை வெல்லக்கூடியபடி அம்பிகையால் வரமடைந்திருப்பதாகவும் கூறினள்.

ஒரு நாள் சானுதாசன் நரவாகனனை முதலைத் திருவிழா பார்க்க வரும்படி வேண்டிக்கொண்டான். நரவாகனனும் திருவிழா பார்க்கச்சென்றான். சென்ற இடத்தில் மாதங்கி ஒருத்தியைக்கண்டு அவளது அழகில் ஈடுபட்டான். அவளோடு உறவாடலானன்.

இதனை அறிந்த காந்தர்வதத்தை தனது நாயகனைக் கோபித்துக்கொண்டாள். அவள் பின்வருங் கதையையுங் கூறினள்.

'கானனத்தீவு என்று ஒரு தீவு உண்டு. அதை ஆண்ட அரசன்பெயர் மனேஹரன். அவனது மந்திரிகள் பாகுலன், அசோகன் எனப்படுவர். இவர்கள் எல்லோரும் கந்தப்பொடியில் மிக்க விருப்பமுடையவர். சுமங்களன் என்றொருவன் கந்தப்பொடியை விற்கவந்தான். அவனை அரசன் வெகுவாக நம்பினன்.

ஒருநாள் அரசன் ஒரு படத்தைப் பார்த்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் அது ஒரு பெண்ணுகமாறியது. மனேகரன் அவளைக் காதலித்தான். அவள் தான் ஒரு இயக்கியென்றும் தான் சீகுஞ்சத்தில் வசிப்பதாயும் அங்கே மனேகரனை வரும்படியாகவும் சொல்லிப்பறந்துசென்றாள். அரசன் கடல்யாத்திரை செய்பவர்களை விசாரித்துச் சீகுஞ்சம் செல்லும் வழியைக் கேட்டான். அவர்களாலே சீகுஞ்சம் இருக்குமிடத்தைத் தெரிந்து அவளைத் தேடிச் சென்று கண்டான். இயக்கர்நாட்டில் மானிடர் ஐந்துநாட்களுக்கு மேல் தங்குதல் கூடாதாகையால், சுகுமாரி மனேஹரனைத் தன்நாடு செல்லும்படியாகவும், தான் அவ்விடம் வருவதாகவும் கூறினள். அரசன் கானனத்தீவை அடைந்தான். சுகுமாரியும் வாக்களித்தவாறே கானனத்தீவு வந்து அவனோடு சுகித்திருந்து திரும்பித் தன்னிடம் சென்றாள்.

இவ்வாறு ஓராண்டு சென்றதும் அவள் இனி ஓராண்டு வரையில் தான் குபேரனது அவையில் தங்க வேண்டியதால் இங்கு அந்தக்காலம் வரையில் வரஇயலாதென்று கூறி விடைபெற்றுச் சென்றனள். மனேகரன் மனேவியாகுலம் அடையவே சுமங்களன் மறுபடியும் சீகுஞ்சத்துக்குப் போகலாமென்றும்; தா

னும் வருவதாகவும் கூறினான். அவர்கள் அவ்வாறே கப்பலேறிப் பயணம்செல்லுகையில் கப்பல் உடைந்தது. அரசன் கடலைநீந்திக் கரையேறினான். அந்தநாட்டிலே அரசன்மகளுக்குத்தகுதியானகணவன் கிடைக்காமையால் மனோகரன் தகுதியான கணவனென்று கண்டசுமங்களன் சூழ்ச்சியாக அவனை இங்குக்கொணர்ந்ததாகக் கூறினான். மனோகரனும் அந்நாட்டு அரசன்மகளான நளினிகியை மணந்தான். இவர்கள்சுகமாக வாழ்ந்துவருகையில் சுகுமாரி ஒருநாளிரவில் தோன்றி மனோகரனைத் தூக்கிச் சென்றாள். அதுபோல இந்த மாதங்கியும் விஞ்சையர் மகளோ என ஐயுறுகின்றேன்' என்று காந்தர்வதத்தை கூறினாள். அன்றுமுதல் நரவாகனன் மாதங்கிவீடு செல்லாமல் நின்றுவிட்டான்.

ஒருநாள் வீணைதத்தகன் நரவாகனனிடம் வந்து கிழவி ஒருத்தி தெருவில் போகின்றவள் தன்மகள் அஜிநாவதியை நரவாகனனுக்கு மணந்துகொடுத்திருப்பதாகப்புலம்பித்திரிகிறாள் என்றான். இந்தச்செய்தியைக் கேட்டவுடன் அச்சமடைந்து நோய் வாய்ப்பட்டுத் துன்புற்றாள். அவள் துன்புறுவதைக் கவனித்துக் கொண்டிருக்கையில் அவள் உறங்கிவிட்டாள். அப்பொழுது அவ்விடம் ஒரு பேய் தோன்றிற்று. அதை நரவாகனன்வெட்ட முயன்றான். கந்தர்வதத்தை விழித்துக் கொள்வாளே என்று அஞ்சி அவன் வாளா இருந்தான். அந்தச் சமயத்தில் அந்தப் பேய் அவனைத் தூக்கிக்கொண்டு ஒருவரும் அறியாதபடி ஓடிற்று. நகரில் பலவிதஅரவங்கள் உண்டாயின. கோமுகனால் நிமித்தங்களை நன்குஅறிந்திருந்த அரசிளங்குமரன் அவற்றின் பயனை ஆராய்ந்தான். தூக்கிச் சென்ற பேய் இடுகாட்டில் விட்டது.

அங்குமுன் கண்ட கிழவி தீ வளர்த்து மாயவேலை செய்துகொண்டிருந்தாள். அவள் ஒரு விஞ்சை மாது. தனவதி என்னும் பெயரினள். அவளுடைய மகன் சண்ட சிங்கனுக்கு அஜிநாவதி என்றொரு மகளுண்டு. அவள் நரவாகனனை முதலைத் திருவிழாவில் கண்டாள். கண்டதுமுதல் அவனை மணந்துகொள்ள விரும்பினாள். இதனை அறிந்த அவளது பாட்டி தன் பேத்தியின் சுகத்தைக் கருதி எவ்வாறாவது நரவாகனனைக்கொணர்ந்து அவன் விரும்பாவிடினும் அவன் விருப்பத்துக்கு மாறாக அஜிநாவதியை மணஞ் செய்விப்பதாகத் தீர்மானித்தாள். அதனைநிறைவேற்றவே இந்தப் பேயை அனுப்பினாள். நரவாகனன் பேயினால் கிழவிமுன் சுடுகாட்டில் கொண்டுவரப்பட்டவுடன் அஜிநாவதியை அழைத்து இருவர் கையையும்சேர்த்துக்கொண்டு ஒருவரையொருவர் மணந்ததாகக் கூறினாள். அப்பொழுது ஒரு ஆகாயரதம் வந்தது. இருவரும் அதனில் ஏறினர். உடனே சண்ட சிங்கனது ஊரை அவர்கள் அடைந்தனர். ஒரு நல்லநாளில்இருவருக்கும் மணம் நடந்தது.

ஆயினும் அஜிநாவதி மகிழ்ச்சி கொள்ளவில்லை. முன்னம் விகசிகன் என்ற விஞ்சையன் இவளைத் தனக்கு மணஞ்செய்து கொடுக்கும்படி சண்டசிங்கனைக் கேட்டிருந்தான். அவன் அஜிநாவதி சிறுமியாக இருக்கின்றாள் என்றுசொல்லிக் காலங்கடத்தி வந்தான். ஆனால் விகசிகன் தனக்கு மணந்து கொடுத்துவிட்டதாக எங்கும் தெரிவித்திருந்தான். உடனே சண்டசிங்கன் மேல் வழக்குத் தொடர்ந்தான். அந்த வழக்குக்காக நரவாகனனும் அஜிநாவதியும் சப்தபருணை என்ற ஊருக்குப் போகவேண்டியதாயிற்று. வழக்கை விசாரணை புரிய வேண்டியவனான வாயுமுக்தன்வழக்கைத் தள்ளிவிட்டான். எனினும் விகசிகன் நரவாகனனைத் துன்புறுத்துவதாகப் பயமுறுத்திச் சென்றான். ஆயினும் நரவாகனன் அஜிநாவதியை மகிழ்ச்சியுறும்படி செய்து கொண்டு வந்தான். இவ்வாறு மகிழ்ச்சியோடு இன்பம் அனுபவித்து வந்தாலும் அவனுக்குக் கட்டுப்பட்டிருப்பதில் அஜிநாவதிக்குச் சம்மதம் இல்லை. இவர்கள் ஒரு தீர்த்தயாத்திரைக்குச் செல்லுகையில் விகசிகன் அங்குத் தோன்றி நரவாகனனை வாயில் வந்தபடி திட்டிவிட்டு அஜிநாவதியைத் தூக்கிச்சென்றான். இதனைக் கண்ட சண்டசிங்கன் பெருஞ்சேனையோடு விகசிகனைத் துரத்திச் சென்றான். நரவாகனனோ நடுக்காட்டில் துணையின்றி நின்றான்.

பின்னர் அவன் வெகு தொலைவு நடந்து வழிதெரியாது திகைத்துக் களைத்துப்போனான். அப்பொழுது இடைப்பையன் ஒருவன் மாடோட்டுங் குரலொன்று கேட்டது. அந்தக் குரல் வழியே சென்று அவனைக்கண்டு அவன் வார்த்த கஞ்சியை உண்டு இரவைக் கழித்தான். அந்த இடையன் அடுத்த ஊருக்குச் செல்லும் வழியைக் காட்டினான்.

நரவாகனன் இடைப் பையன் காட்டிய வழியே சென்று அந்த ஊரை அடைந்ததும், இவனைக் கண்ட முதல் மனிதன் இங்குத் தன் தமையனைத் தேடித் திரியும் இளம் பிரபுவின் தமையன் இதோ வந்தார் என்று கூவினான். பின்னர்த் தன்னைத்தேடி வந்தவன் கோமுகனென்று அறிந்து அவனைக்கண்டு தழுவிக் கொண்டான்.

கோமுகன் கௌசாம்பியை நரவாகனன் விட்ட பிறகு நடந்தவரலாற்றை ஆதியோடந்தமாகக் கூறினான். உதையணன் துக்கத்திலாழ்ந்ததும், ஒரு நாள் வேகவதியும் அமிர்தசத்தியும் தோன்றினதும், வேகவதி உயிர்வாழ மறுத்தமையும், பின்னர் அமிர்தகதியால் உயிர்தாங்கி நிற்பதும், நரவாகனன் உயிரோடு சம்பா நகரில் வாழ்வதாக அமிர்தகதி யோகவுணர்ச்சியால் கூறினதும், அதன் மேல் உதையணன் சிறிது சாந்தியடைந்திருப்பதும் பிறவும் கூறினான். உதையணன் ஒருபெரிய வணிகச்சாத்தைத் தன்னோடு கூட்டியனுப்பியதும், அவர்களை வழியில் காட்டுஜனங்கள் வழி மறித்ததும், அவர்களை அரசனுடைய காவலர் வென்றுவிட்டதாகக் கேள்விப்பட்டதும் தனது குதிரை வெறித்து ஓடிக் கீழேவிழுந்துஇறந்ததும், பின்னர் இந்த ஊரை அடைந்ததும் மற்றும் கூறினான். இவர்கள் அங்கேயே ஒருமாதகாலந் தங்கிஇளைப்பாறினார்கள். பின்னர்க் கோமுகன் காசிக்குச் சென்றால் தங்கள்நாட்டுச் செய்திகளை அறிந்து கொள்ளலாமென்று கூறினான். அவ்வாறே காசிநோக்கி இருவரும் புறப்பட்டனர்.

சூரியன்

[268-வது பக்கத் தொடர்ச்சி]

சூரிய குடும்பம்

இடைநிலைக் கோள்கள்

உள்ளடி வரைகள் யாவும் ஒன்புற வடியி னீத்தம்
வள்ளுகிர் விரல்கண் முற்றும் வானுரு மேறு நாள்கோள்
எள்ளரும் பரடி தன்னி லிரும்புனற் கிறைவன் சோமன்
நள்ளிருளனையமேனிநிருதியோடரக்கர்நண்ண.

[திக்குத்

கருணைகொள் விழியிற் சோமன் கதிரவன் செவியிற்
திருநுதற் குடிலை வைப்புச் சென்னியிற் பரம வான்மா
மரபினின் மேவித் தோன்ற மாறிலா திருக்குந் தொல்லை
ஒருதன துருவங் காட்டி நிற்றலும் உம்பர் கண்டார்.

—கந்தபுராணம்.

நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் துன்னணுப் புரைய.—திருவாசகம்.

சிறுகோளத்திரள்கள்:—செவ்வாய்க்கிரகத்திற்கும், வியாழக்கிரகத்திற்கும் இடையே யுள்ள பிராகாரம், 3,00,00,000 கல் அகலமானது. இதனுள்ளே பல்லாயிரச் சிறுகோளத் திரள்கள் (Asteroids or Planetoids) சுற்றி வருகின்றன. இக்கோளத் திரள்களின் எல்லையே, உள்நிலைக் கோளங்களையும் வெளிநிலைக் கோளங்களையும், வேறுபிரிக்கின்றது: ககோள சாஸ்திரியார் ஒருவர், சூரியனுக்கும், கிரகத்திற்கும் உள்ள தூரத்தைப்பற்றிய நியதியொன்றைக் கண்டுபிடித்தார் (Bode's Law). அவ்வியற்கைச் சட்டத்தின்படி, சூரியனுக்கு, இவ்வளவு இவ்வளவு தூரத்திலே, கிரகங்கள் இருக்கவேண்டும் என்னக் கணக்கிட்டுச் சொல்லலாம். இக்கணக்கின் பிரகாரம், இப்பிராகாரத்தில் ஒரு கிரகம் இருக்கவேண்டும் என்று பலர் சந்தேகித்து அதனைக் காணவேண்டி உழைத்து வருகையில், இந்தச் சிறு கோளங்களைக் கண்டுபிடித்தனர். ஒரு காலத்தில், இப்பிராகாரத்தில் ஒரு கிரகம் இருந்திருக்கவேண்டும் என்றும், ஏதோ காரணத்தினால் அந்தக்கோள் உடைந்து சிதறிப்போய், இச்சிறுகோளங்களாக உருப்பெற்றதென்றும், சில வானசாஸ்திரிகள் கருதுகின்றனர்.

தூரதிருஷ்டிக்காட்சி:—பெரியஒரு தூரதிருஷ்டிக் கண்ணாடி கொண்டு பார்த்தாலும், இக்கோளங்கள் மிகச் சிறிய புள்ளிகள் போலத்தான், தோன்றுகின்றன. இவைகள் எல்லாவற்றையும் ஒருங்கு சேர்ப்பினும், பூமியின் அளவில், காலளவுகூட ஆகா என்பது திண்ணம். இத்திரள்களில், 50,000 கோளங்கள் இருப்பினும் இருக்கலாம் என வான சாஸ்திரிகள் கணக்கெடுக்கின்றனர். தூரதிருஷ்டிக் கண்ணாடி வழியே நோக்கினாலும், இவற்றில் 30 கோளங்களே புலனாகின்றன. 'இவற்றின் சீதோஷ்ணநிலை தான் யாது' என்றோ, 'இவற்றில் நீருண்டோ காற்றுண்டோ' என்றோ, தேற்றமாகக் கூறுதற்குப் போதிய ஆதாரங்கள் நமக்குத் தோன்றவில்லை. புராணங்கள் கூறும் இயக்கர், கந்தர்வர், வித்தியாதரர் முதலானோர் வாழும் உலகங்கள், இவையோ என்று எண்ணத் தக்கனவாய், ஆகாய வெளியில் சுழன்று வருகின்றன. இவ்வாகாயத் தீவுகளில் ஜீவர்கள் இருக்கின்றனரோ இல்லையோ வென்று துணிந்து கூறத் தக்க குறிப்புக்கள் ஒன்றும், தூரதிருஷ்டி வழியேயும்கூடக் கிட்டவில்லை. கொசுகின் கூட்டம்போல, இப்பிராகாரத்தில் ஓடும் இவற்றில் சிற்சிலவே, மின்மினிகள்போலத் தோன்றுகின்றன. தக்க கருவிகள் இல்லாமையால், விஞ்ஞான சாஸ்திரிகள், இதுவரையிலும், இக்கோள்களைப் பற்றிப் போதுமான ஆராய்ச்சி புரியவில்லை. ஆயினும், ஒரு திரள், இச்சூரிய குடும்ப வீட்டின் தாழ்வாரத்தே தோன்றுவதால், இவையும் நமது உலகத்தைப் போன்ற சிற்றுலகங்களாயிருத்தல் வேண்டும் என்று வான சாஸ்திரிகள் அனுமானிக்கின்றனர்.

முப்பது கோள்கள்:—நன்றாகத்தோன்றுகின்ற முப்பது சிறுகோள்களுக்கும், ஆங்கிலத்தில் பெயர்கள் வைத்துள்ளனர். இப்பெயர்கள் எல்லாம், பெரும்பாலும், கிரீக்போர்வீரர்களின் பெயர்களாகவேவிளங்குகின்றன. இவற்றில் நான்கே பெரியவை. அவைகளைப்பற்றிச் சில குறிப்புக்கள் தெரிய வருகின்றன. ஆயினும், தூரதிருஷ்டியிலே பார்க்கும்போதும், அவை, மிகச் சிறியனவாகவேதோன்றுகின்றன. இவற்றிலே பெரியது, சீரீஸ் (Ceres) என்பதாம்; இதன் குறுக்களவு 485 கல்லாம். இரண்டாவது கோள், சரஸ்வதி (Pallas) என்பதாகும்; இதன் குறுக்களவு 304 கல்லாம். மூன்றாவது கோள் வேஷ்டை (Vesta) என்பதாம்; இதன் குறுக்களவு 243 கல்லாம். நான்காவது, தாரை (Juno) என்பதாம். இதன் குறுக்களவு 118 கல்லாம். பூமி, செவ்வாய்முதலிய ஏனைய கோள்களைப்போல, இந்த நான்கும், உருண்டை வடிவமாகக் காணப்படவில்லை. பல ஒழுங்கற்ற கோணல் வடிவங்களாக, இவை, தோன்றுகின்றன. இவை சூரியனைச்சுற்றி யோடுகிற வழியும் வட்டமாய் இராமல், கோணலாக நீண்டு வளைந்து கிடக்கிறது. வானசாத்திரி ஒருவர் இக்கோள்களை, சனியைச் சுற்றியிருக்கும் வளையத்திற்கு ஒப்பிடுகின்றார். கோளங்கள், ஒன்றுக்கொன்று சமதூரத்தில் இல்லை. இத்தகைய குழப்பத்திலும், ஓர் ஒழுங்கு உண்டென்றே கொள்ளுதல் வேண்டும்.

ஆராய்ச்சி:—சென்ற ஐரோப்பியயுத்தத்திற்குமுன்னர், இவற்றை ஆராயும் நிமித்தம், இவற்றைப் பல பிரிவுகளாகப் பிரித்துக்கொண்டு, மேனாட்டு வான சாஸ்திரிகளும், பலகூட்டமாகப் பிரிந்து, ஒவ்வொரு பிரிவை, ஒவ்வொரு கூட்டத்தாராக, ஆராயத் தலைப்பட்டனர். யுத்தம் தொடங்கியபொழுது, இவ்வரிய ஆராய்ச்சி பாழாயிற்று. ஆயினும், நாலைந்து வருஷத்திற்கு ஒருமுறை இரண்டொரு விஞ்ஞான சாஸ்திரிகள், இவற்றைப்பற்றிய அரிய நுட்பமான உண்மைகளைக் கண்டறிந்து வெளியிட்டுவருகின்றனர். அரியதொரு கணித நீதியையும் கண்டுபிடித்துள்ளார்கள். ஈதே, லப்லாஸ் (Laplace) என்பவர், மூன்றுச் சுழலும் பொருள்களின் ஓட்டத்தைவிளக்கக் கண்டுபிடித்தமுக்கோணச்சுழற்சித்தத்துவமாகும் (Equilateral triangle solution of three body problem). சூரியனையும் வியாழனையும் மாறு நிலையாகக்

கொண்டு, இச்சிறுகோள்களில் வேண்டியதொன்றை மாற்றி மாற்றி மூன்றுவதாகக்கொண்டு,மும்மூன்று பொருள்கள், ஒரே ஏண் நிலையைச் சுற்றி (Centre of Gravity), ஒரே தன்மையான வட்டவழிகளிலோ, முட்டை வழிகளிலோ (Ellipses) சுற்றிவரலாம் என்று கண்டனர்; இந்தச் சிறு கோள்களில் மூன்றை எடுத்து,அவை ஒரு தன்மையவான பாதைகளிற் செல்லும் முறைகளை நிரூபித்துள்ளார்.

வெளி நிலைக் கோள்கள்

6. வியாழன்

பொருவி லாதொளிர் வியாழமே வரும்பசும் பொற்றேர்
பரிக ளெட்டுடன் பகலொளி படப்பரந் தொளிரும்

—இலிங்கபுராணம்

சில குறிப்புக்கள்:—அடுத்தாற்போல், ஆறும் பிராகாரத்திலே அழகாய் விளங்குவது, தேவகுரு என்றும், பிரகஸ்பதி என்றும், இராஜா என்றும் வழங்கும் வியாழனே(Jupiter) யாம். இது சூரியனுக்கு 482,000,000 கல் தூரத்தில் இருக்கிறது. அளவில், சூரியனில், ஆயிரத்தில் ஒரு பாகமாய் ($\frac{1}{1047}$) இருந்தாலும், மற்ற எல்லாக் கிரகங்களேயும்விடப் பெரியதாக விளங்குகின்றது. பூமியைவிட 1350 மடங்கு பெரியது. இதன் குறுக்களவு 85,000 கல்லாகும். இது நமது பூமியின் குறுக்களவைவிடப் பதினொரு மடங்கு பெரிதாகும். இதன் எடை, பூமியின் எடையைவிட 315 மடங்கு அதிகம். எல்லாக் கோள்களையும் ஒன்றாய்ச் சேர்த்து நிறுத்தபோதும், அவற்றைவிட இரண்டரை மடங்கு எடை யதிகமாக இருக்கும். ஆகாசவெளியில் காணும்பொழுது, அது வெகு தூரத்தில் இருப்பதால், வெள்ளிக்கிரகத்தின் அளவாகத்தான்தோன்றுகிறது. வெளிச்சத்திலும் வெள்ளிக்குப் பின்வாங்குகிறது.

"வெள்ளி யெழுந்து வியாழம் உறங்கிற்று"

—திருப்பாவை

என்று, ஆண்டாள் பாடுவது காண்க. இந்தக்கோள் சூரியனைச் சுற்றிவர, ஏறக்குறைய 12 வருஷமாகும் (11.867 வருஷம்). சூரியனுக்கு வெகு தூரத்தில் இருப்பதால், நமக்குக் கிடைக்கும் சூரிய வெளிச்சத்தில், 25-ல் ஒரு பாகமே வியாழனில் கிடைக்கும். ஆயினும் சுயவொளியோடு பிரதிபிம்ப ஒளியும் கொண்டு திகழ்கின்றது, இக்கோள். இக்கோளம் அதிக உஷ்ணமானது. அதனால்தான், இவ்வளவு பிரகாசமாக விளங்குகிறது. இதனிலுள்ள வெளிப்புற நெருப்பு, இன்னும் தணியவில்லை. தணிவதற்கு, இன்னும் பல ஆண்டுகள் செல்லும். ஆகையால், நம்மைப்போன்ற ஜீவராசிகள் இங்கு, வசிப்பதாகச் சொல்லுவதற்கு இடமில்லை. இக்கோளம், தன்னைத் தானே ஒருதரம் சுற்றிவர, ஏறக்குறைய, பத்துமணி நேரமாகும் (9 மணி 55 நிமிஷம் 35 விநாடி).

ஒளியின் வேக மளத்தல்—வியாழத்தாலும் அதன் உப கிரகங்களாலுமே, வெளிச்சம் என்னும் பதார்த்தத்திற்கும் வரையறுக்கத்தக்க வேகம் உண்டு என்று, ககோளசாஸ்திரியாகிய ஓலாப் ரோமர் (Olaf Romer) 1675-ம் ஆண்டில், கண்டுபிடித்தனர். கணித சாஸ்த்திர முறைப்படி, வியாழத்தில் தோன்றிவருகின்ற கிரணங்களைக் கணக்கிட்டு வந்தார். இவற்றைத் தூரதிருஷ்டியால் காணும்போது, ஒன்றுக்கொன்று $16\frac{1}{2}$ நிமிஷம் வித்தியாசப்பட்டது. இவ்வித்தியாசத்திற்குக் காரணம் யாதென்று ஆராயும்போது, வெளிச்சமானது வியாழத்தினின்றும் நமது பூமிக்கு வர, அவ்வளவு தூரத்தில்,அத்துணைக்காலம் பிடிக்கின்றதென அறிந்தார். பிறகு, வேறு நிலைகளில் வியாழனும் பூமியும் நிற்கும்போது, தூரத்திற்குத் தக்கவாறு இவ்வொளி வரும் நேரமும் பேதப்பட்டதால், வெளிச்சம் ஒரு விநாடிக்கு 187,000 கல் தூரம் ஓடுகிறது என்பதை நிரூபித்தார். இப்போதுள்ளார், ஒளி 186,500 கல் தூரம் பாய்வதாகக் கணக்கெடுத்துள்ளார்கள். ஆதலால், நாம் சூரியனிடத்தினின்று பெறும் ஒளி, நம்மை அடைய 500 விநாடிகள் அல்லது $8\frac{1}{4}$ நிமிஷம் ஆகிறதென்று கணக்கிட்டுள்ளார்கள். இவ்வாறு, வெகு தூரத்தில் இருக்கும் இவற்றையும், நக்ஷத்திரங்களையும், இத்துணைக்கல் தூரத்தில் இருக்கின்றன என்று எண்ணால் எழுத ஏடு இடம் தராது. ஆகையால், அப்பொருள்களிலிருந்து ஒளிவர எத்தனை நேரமாகுமோ, அந்த நேரத்தால், அந்தத் தூரங்களை அளந்தறிந் தெழுதிவருகின்றனர்; இக்காலத்து வானசாஸ்திரிகள், '500 ஒளி விநாடி தூரத்தில் உள்ளது: 8 ஒளி நிமிஷ தூரத்தில் இருக்கின்றது; ஒளி நாள் தூரத்தில் இருக்கின்றது; ஒளி மாத தூரத்தில் இருக்கின்றது ; ஒளி வருஷ தூரத்தில் இருக்கிறது' என்று வழங்கிவருகின்றனர். ஓர் ஒளி விநாடி என்றால் 186,500 கல் தூரமாகும்.

தூரதிருஷ்டிக்காட்சி.—தூரதிருஷ்டியின் வழியே காணும்போது, இது, ஒரு சிறிய சூரியன் போலவே, தோன்றுகின்றது. சூரியனது இயல்புகள், பெரும்பாலும், இதனிலேயும் அமைந்துள்ளன. சூரியனைப்போல, உஷ்ணமாயும், வெளிச்சமாயும், இருப்பதும் அன்றி,இதனிலுள்ள எல்லாப் பொருள்களும் உருகி நீராய்க்கிடக்கின்றன. இதன் வெளிப்பாகம், குழம்பாகவே இருக்கின்றது. இதன் நாடிமண்டலத்திற்குச் சமதூரத்தில், பட்டையாய் அகன்ற கருங்கோடுகள் (Belts) காட்சி தந்து கண்ணைக் கவர்கின்றன. அவை, எக்காலத்தும், ஒரு தன்மையாயிராமல், பல பல உருவங்களைப்பெற்று, நமது மப்புக்களைப்போல, மாறுதலடைகின்றன. ஆதலால், அவை, வியாழமண்டலத்தைக் கவிந்திருக்கும் ஒருவகை மேகப் படலங்கள் என்பார் சிலர். அப் பட்டைக்கோடுகளின் மீது கரும் புள்ளிகளும் தோன்றுகின்றன. கரும்புள்ளிகள் எனும் பரப்புக்களினிடையே, ஒன்று, சிவந்து விளங்குகிறது. (The Great Redspot). இக்கிரக ஆராச்சிக்கு, இது, பெரிதும் பயன்படுகிறது. இவ்வாறு, வெள்ளிய புகைமேகங்களால் மூடப்படாத பிரதேசங்களை, நாம் தூரதிருஷ்டி வழியாக நோக்கும்போது, இக்கோளத்தின் மேற்பாகம், உருகியோடும் பசும் பொன்போலத் தோன்றுகிறது.இதனாலன்றோ நம்மவர்கள் இதனைப் பொன்னன் என வழங்குகின்றனர். இக்கோளினும், சூரியனில் கண்டதுபோலப் பலவேறு சுழற்சிநிலைகளைக் காண்கின்றோம். ஆகவே, இங்கும், நாடி மண்டலபாகம் ஒரு விதமாகவும், துருவமண்டல பாகம் மற்றொரு விதமாகவும் இருக்கின்றன என்பதாயிற்று. சூரியனில், திடீரென்று கரும் புள்ளிகள் சிடுசிடுப்போடு தோன்றுவதுபோல, இதனிலும் சில காலங்களில், சுவாலை அதிகரித்துக் காட்டும். எனினும், பொதுவாக, இது, சூரியனைக் காட்டிலும் இறுகி அழுந்தியுள்ளது. இதனைச் சுற்றி

யோடும் ஒன்பது உபக்கிரகங்களுக்கும், ஈதே சூரியனுக்கும். ஆதலால், வியாழகுடும்பமும், சூரியகுடும்பமும் கணக்கினும் ஒன்றாகவே இருக்கின்றன.

உபகிரகங்கள்:—1610-ம் வருஷத்தில், இத்தலிதேயத்து வானசாஸ்திரி கலிலியோ என்பவர், இக்கிரகத்தைச்சுற்றி வருகின்ற நான்கு திங்கள்களைமட்டும் கண்டார். இவை பெரியனவாகவும் பிரகாசமாகவும் விளங்குகின்றன. இப்போது, ஒன்பது உபக் கிரகங்களைக்கண்டுபிடித்துள்ளார்கள். இன்னும் சிலஇருப்பினும் இருக்கலாம். இவையாவும், வியாழத்தின் நாடிமண்டலத்திற்கு நேராகக் கறுப்புப்பட்டைக் கோடுகளின் வரிசைகளிலேதான் காட்சியளிக்கின்றன. சில சமயங்களில், இவை வியாழனுக்கு இருபுறத்திலும் தோன்றுகின்றன. இவற்றுள் பெரியதாக உள்ளதன் குறுக்களவு, 3550 கல்லாம். இவையாவும் முட்டைவடிவமாக இருக்கின்றன. இவ்வொன்பது சந்திரர்களும், இதனைச் சுற்றி, நவநாதசித்தர்களைப் போல, ஓடுகின்றன. வெண்ணிறமான இவ்வியாழ வட்டத்தின்மீது, இவை கரும்புள்ளிகள்போலத் தோன்றுகின்றன. இவற்றிற் சில, நமது ஊனக்கண்ணுக்கும் புலனாகின்றன எனக் கூறுகின்றவர்களும் உளர். இவ்வுபகிரகங்கள், நமது பூமிபோலக் குளிர்ந்துள்ளனவாதலா லிங்கு ஜீவர்கள்வசிப்பது சாத்தியமாகலாம். இவற்றைப் பெரிய தூரதிருஷ்டியின் வழியே நோக்கினாலும், மிகச் சிறியனவாகத் தோன்றுதலால், இவற்றின் இயல்புகளை ஆராய்ந்து கண்டறிவது அருமையினும் அருமை. ஆனால்,இவ்வுலகங்கள் மிகவும் அற்புதமான காட்சி தந்ததருள்கின்றன. சூரிய வெளிச்சம் ஒருபுறமும், வியாழனின் ஒளி ஒருபுறமும், இவ்வுபகிரகங்களின்மீது பாய்கின்றன. இவற்றில், ஒன்றின் வெளிச்சம் மற்றவற்றின் மீதாக வீச, அவ்வொளியில், இவை, விளங்குகின்றன. உபகிரகங்களின் நின்று, நாம் காணக்கூடிய வியாழத்தின் தோற்றத்தை, மனோ கற்பனையால், மிகஅழகிய ஓவியமாக எழுதி, மேனாட்டார் வெளியிட்டிருக்கின்றனர்.

தூமகேதுக்கள்:—வியாழனும்,மற்றைய வெளிநிலைக் கிரகங்களும் தத்தமக்கு உட்பட்ட தூமகேதுக் கூட்டங்களை அடக்கியாள்கின்றன. சூரியனும், இவ்வாட்சிபுரிய இவற்றிற்குத் துணை செய்கின்றான். வியாழத்தைச்சேர்ந்த தூமகேதுக்கூட்டங்கள்தாம், மிகப் பெரியவை. இக்கூட்டத்தில் சுமார் 50 தூமகேதுக்கள் உள்ளனவாம். இவற்றை நோக்கும்பொழுது இக்கிரகத்தைத் தேவகுரு என்றழைப்பது பொருத்தமெனத் தோன்றுகிறது.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[285-வது பக்கத் தொடர்ச்சி]

7-ம் பத்து, 7-ம் தசகம்

1-ம் பாசுரம்

ஏழையராவியுண்ணுமிணைக்
  கூற்றங்கொலோவறியேன்
ஆழியங்கண்ணபிரான்
  திருக்கண்கள்கொலோவறியேன்
சூழவும்தாமரைநாண்மலர்போல்
  வந்துதோன்றுங்கண்டீர்
தோழியர்காளன்னைமீரென்செய்கேன்
  துயராட்டியேனே.

உரை :—துயராட்டியேன் - துக்கப்படுவதற்கே பிறந்தயான், தோழியர்காள் அன்னைமீர்-அன்னைமார்களே, என் தோழிமார்களே (இவர்களை விளித்துச் சங்கதி தெரியப்படுத்துகிறபடி) சூழவும் - நாலா பக்கங்களிலும், தாமரை நாள்மலர் - அப்போதலர்ந்த திவ்விய பரிமளமுள்ள தாமரைப் பூக்களைப்போல், வந்து - கண்களுக்குத் தென்பட்டு, தோன்றும் - நன்றாய் விளங்குகிறதே.

கண்டீர் - எனக்கு விசதமாய்த் தெரிகின்றது, உங்கள் கண்ணுக்குப் புலப்படவில்லையா? [ஏன் அவர்கள் என்னைப்போல அறிந்துகொள்ளவில்லையென்று சங்கைப்படுகிறாள்] இப்படித் தோன்றுகின்ற காட்சிதான் என்னவென்றால்— ஏழையர்- திவ்யஸௌந்தரியத்தில் ஈடுபட்டு அதனால்அப்பகவானுடைய அழகுக்குத் தோற்றுப்போன பெண்டீர்களின், ஆவியை- உயிரை, உண்ணும் - கொன்று தின்னும், இணை - ஜோடியாகவுள்ள அல்லது ஒன்றோடொன்று போட்டி போட்டுக்கொண்டு தீங்கு விளைக்கும், கூற்றங்கொல்- யமன்களோ, ஆழிபிரான் திருக்கண்களோ - ரமணியமாய்க் குளிர்ந்து வெளுத்த க்ஷீராப்தி சூழ்ந்த மண்டலங்களுக்கெல்லாம் பிரபுவானவருடைய திருக்கண்களோ, அறியேன் - எனக்கு நிச்சயிக்கக்கூடவில்லை—பகவானின் திருக்கண்களானால் ஒருக்காலும் கொடுமைசெய்யாதவைகளாயல்லவோ இருக்கவேண்டும். யமன்களானால் என் தாய்மார்களையும் தோழிமார்களையும் நலிவுசெய்யவேண்டுமல்லவோ? இவர்களை நலிவுசெய்தால் அவர்கள் இப்போழ்து சொல்வதுபோல் என்னைப்பற்றிக் குறைகூறமாட்டார்களே?

விசேஷக் குறிப்புக்கள் I—சென்ற தசகத்தில் ஆழ்வார், பகவான் தமக்கு "ஏற்றரும் வைகுந்தம் அருளு"மென்று முன் சொஸ்த சித்தராய் இருந்தவர் இந்தத் தசகத்தில் பகவானின் திருக்கண்கள் தன்னை அல்லல்படுத்துவனவென்று வருத்தப்பட்ட காரணம் என்னென்றால், பகவானின் ஸேவை தம் மனோபாவமாய் நின்றுபோய்விட்டதே யொழியத் தமக்குக் கிட்டி அநுபவிக்கக் கூடாமைபற்றி, என்று கொள்ளவேண்டும். தத்காலம் ஆழ்வாரின் திருவுள்ளநிகழ்ச்சியில் சாக்ஷாத்கரித்ததுபோலவே வெகு தெளிவாய்ப் பகவானின் திருக்கண்களின் அழகு தோற்றுகிறபடியால் அதைக் கவனித்து நினைத்தால் அத்தலையிலவைகள் தன்னைப் பண்டுபோலே குளிரக்கடாக்ஷித்துமனத்தேர்ச்சி உண்டாக்கவில்லையே என்று நோவு, இத்தலையில் அவைகளின் அழகைக் கணிசித்தால் அவைகளை நோக்காது விட்டொழியவும் ஸாத்தியமில்லையே என்ற மனவருத்தம். இந்நிலையில் இதுவே ஓர் பிராட்டியின் பாசுரத்தினால், அன்றலர்ந்த தாமரைப் பூப்போலச் சூழ்ந்து தன்னை வசப்படுத்துகிற தென்று பாடுகிறார்.

II. பிரிந்து சென்ற தலைமகனிடத்தில் தலைவி இடைவிடாது கருத்தைச் செலுத்துவதால் சிந்தைமிகுதிபற்றி அவளுக்கு அவனுடைய வடிவம் கண்ணுக்கு

எதிரிலே காணப்பட அவ்வடிவத்தின் கண்ணழகிலே ஈடுபட்ட தலைமகள் இப்பாசுரத்தில் அவை தன் காதல்நோயை மிக்க வளர்த்துத் தன்னை வருத்துந் தன்மையை அன்னையருக்கும் தோழிமார்களுக்கும் பரக்கக்கூறுகிறாள். அகப்பொருள் இலக்கணக் காப்பியங்களில் இத்துறைக்கு "உருவு வெளிப்பாடு கண்டு இரங்கல்" என்று பெயரிட்டு வர்ணித்திருக்கிறார்கள். முன்னமேயே இவ்வாழ்வாருக்கு இந்நிலை ஸம்பவித்ததை நாம் 5-ம் திருவாய்மொழி 5-ம் தசகம் "எங்ஙனேயோ" யில் கண்டோம். அங்கே ஓர் பிராட்டியின் பாசுரத்தாலே பாடிய தசகத்தில் "கோலதிருக்குறுங்குடி நம்பி" யின் அர்ச்சாவதாரத்தில் "நிறைந்த சோதி வெள்ளம் சூழ்ந்த நீண்ட பொன்மேனியில்" 7ம் பாசுரம் "மார்வில் திருமருவும்" பஞ்சாயுதமும், "பூந்தண் மாலையும் தண்துழாயும்" "சென்னிநீள் முடியும்" "செய்ய தாமரைக் கண்ணும்" "இங்ஙனே தோன்றுகின்றது என்முன்னே" என்று உருவெளிப்பாட்டைக் "கழிய மிக்கதோர் காதலாலே ஆழ்வார் தாய்மார் முனிந்து தகைந்ததும் மறுத்துரைத்ததும் அவர்களை "என் நெஞ்சினால் நோக்கிக் காணீர்" என ஸமரஸமாய்ப் பாடினார்.

பண்டைய கலவியில் தான் கட்டியணைத்த திருமார்பும், கையால் பிடித்த திருவடியும் அகப்படா விட்டாலும் தன்னுடைய இழவையே பெரிதாகப் பிதற்றி மனக்கலக்கப்பட்டதாகக் காணவில்லை. பழையகாலத்தில் தாம்பெற்ற அநுபவம் ஒருவாறு ஆற்றியிருக்கவே, பயன்பட்டதாக நாம் மேல் கண்டிருந்தும் குறிப்புகளாலறியலாகிறது. பிருகிருதம் "ஏழையராவி" இப்பாசுரத்தில் பகவானின் திருக்கண்கள் தாமரைப் பூக்கள்போல் வந்து சூழ்ந்து தோன்றினாலும் அவைகள் "கூற்று"(யமன்)போல் உயிரை ஈர்க்கிறதென்று நோவுபடுகிறார். ஆகவே வெறுப்புவிருப்புகள் கலந்து ஆக்கம் பெறாத புன்மக்கள்போல அதாவது "பெற்றவை சிறுகப் பெறாத பெரிதுள்ளும்" பாக்கிய ஹீனரைப்போல் பரிதபிக்கின்றார். இதில் ஆழ்வார் "உருவெளித் தோற்றத்தில்" முதிர்ந்த வன்மையான கொடூரப் பகுதியை வேறொரு திணையாகப் பாடியிருக்கிறாரென்று கொள்ளலாமோ? எல்லா இழவிலும் பூர்வாநுபவங்கள் ஆற்றியிருக்கவு மிடந்தரும்; வெறுப்புக்கும் ஆளாக்கவுமாகும்.

III இப்பாசுரத்தில், தமக்குக் கிடைக்காத இன்பத்தை நினைத்துச் சித்தம்கலங்குவது போலவே இம்மஹான் திருவிருத்தப் பாசுரம் (82)ல் பகவானின் (நாயகனின்) திருக்கண்கள் "உருவெளித் தோற்றத்தில்" இரண்டு சூரியன்களைப்போல் 'மந்தேஹர்' என்கிற அசுரர்களை உருக்கித் தொலைப்பதுபோல் தம்மையும் "விரிவ்"–தாபம் செய்வனவாய்ப் பரவுகின்றன என்று நோவுபடுகின்றார். "வையம் முற்றும் விளரியது"—உலகமுற்றும் செழிக்கச் செய்யும் தண்மை இதுவோ சொல்வீர்," என்றும் கேட்கின்றார். மேல் கண்ட திருவிருத்தம், 82-வது பாசுரம் பின்வருமாறு:—

"எரிகொள்செந் நாயி றிரண்டுட னேயுத
யம்மலைவாய்
விரிகின்ற வண்ணத்த வெம்பெரு
மான் கண்கள் மீண்டவற்று
ளெரிகொள்செந் தீவீ ழசுரரைப் போலவெம்
போலியர்க்கும்
விரிவச்சொல் லீரிது வோவைய முற்றும்
விளரியதே.

2-ம் பாசுரம்.

ஆட்டியுந் தூற்றியுநின் றன்னைமீ
ரென்னைநீர் நலிந் தென்
மாட்டுயர் கற்பகத்தின் வல்லியோ
கொழுந்தோ வறியே
னீட்டிய வெண்ணெ யுண்டான்
திருமூக்கென தாவியுள்ளே
மாட்டிய வல்விளக்கின் சுடராய்
நிற்கும் வாலியதே.

ஆட்டியும் - என்னை யிருந்தவிடத்தி லிருக்கமாட்டாதே அலைத்தும் நிஷ்டூரவாக்கியங்களைச் சொல்லி அலற்றியும் அன்னைமார்களே! என்னைப்பற்றிப்பல அபக்கியாதிகளை இடைவிடாது ஊரார்க்குச் சொல்லியும் என்னைப் பீடித்துவருவதில் உங்களுக்கென்ன பயன்? சிரேஷ்டமான க்ஷீராப்தியில் ஓங்கி வளர்ந்து வெகு அழகாய்க் கிளம்பிப் பிரகாசிக்கும் கொடியோ அல்லது அதின் கொழுந்தோ அல்லது வெகு உற்சாகத்துடன் கண்ணபிரான் அமுதுசெய்ய வேண்டுமென்று தயிரினின்றும் கடைந்து திரட்டி யெடுத்த வெண்ணெயை ஆர்வத்துடன் அவசரமாய்த் திருவாய் வைத்துப் புசித்த நவநீத மொட்டிவிளங்கும் அவனின் திரு மூக்கோ நானறியேன்? நான் சந்தேஹப்படாமலறிவது ஒன்றே. எனது ஆத்மாவுக்குள்ளே ஏத்தி ஜ்வலிக்கிற தீபம்போல் என்னைப் பலாத்காரமாய்த்தீச்சுடர்போல் எரித்துவிடுகிறது அந்தத்தோற்றம். வெண்ணெய்வாசனையுங் கலந்து உறைப்பதால் கண்ணபிரான் அவசரத்திலுண்ட வெண்ணெ யுண்டையின் சகலங்கள் ஒட்டிக்கிடக்கும் திருநாஸிகையென்றே அநுமானிக்கிறேன். இவ்வளவு நெருக்கிப் பீடிக்க மற்றஎந்த ஹேதுவுக்கும் வலிமை போதாது என்று இப்பிராட்டி சொல்கிறாள். வாலியதே 'வலியதே' என்னும் பதம் நீண்டது. வேறு எப்பதார்த்தத்துக்கும் இப்படிப்பட்ட (சக்தி) வலிமையுண்டோ வென்று கேள்வி.

3-ம் பாசுரம்

வாலியதோர் கனிகொல்
வினையாட்டியேன் வல்வினைகொல்
கோலத்திரள் பவளக்கொழுந்
துண்டங்கொலோ அறியேன்
நீலநெடு முகில்போல் திருமேனி
யம்மான் தொண்டைவாய்
ஏலும் திசையு ளெல்லாம்வந்து
தோன்றும் என்னின்னுயிர்க்கே.

பொழிப்புரை:—பக்குவமாய் அதிரஸமாக உள்ளதொரு பழமோ, அல்லது விரஹவியஸநத்தை யநுபவிக்கப் பிறந்தஎன் பாபமோ? ஸௌந்தரியசமுதாயமான பவளத்தினுடைய ஒரு துண்டமோ? அவையெல்லாம் அல்லாமல் நீருண்ட மேகம்போல் உள்ள ரமணிய திவ்விய ரூபனானவனுடைய அழகான திருப்பவளமோ? இந்த உருவங்களையெல்லா மொத்து வெகு அழகாய் அமைந்து என்னை முடிக்கிறதற்காக

எல்லாத் திக்குக்களிலும் வந்து தோன்று நின்றதே இதென்ன விபரீதம்? என்கிருள்.

4-ம் பாசுரம்

இன்னுயிர்க் கேழையர்மேல்
வனையும்இணைநீல விற்கொல்
மன்னிய சீர்மதனன்
கருப்புச்சிலை கொல்மதனன்
தன்னுயிர்த்தாதைக் கண்ணப்
பெருமான் புருவமவையே
என்னுயிர் மேலனவாய்
அடுகின்றனவென்று நின்றே.

பதக் குறிப்புக்கள்:— ஏழையர் - கண்ணபிரானை வீணுக ஆசைப்படும் என்னைப்போன்ற பலமில்லாத பெண்கள்மேல், இன்னுயிர்க்கு-அருமையானஉயிரை வாட்டுவதற்காக, வளைந்து அம்புகளை எய்யும்ஜோடி யான இந்திரநீலவர்ணமான வில்லுகளோ, மன்னிய சீர்-ஸ்திரமான கல்யாண குணங்கள் (இங்கு அழியாத திவ்விய ஸௌந்தரியத்தை) உடைய, மதனன் - மன்மதனின், கரும்புவில்லோ, மதனன் உயிர்த்தாதை - மதனனுக்காத்மாவான, கண்ணபிரான் பெருமான் புருவம் அவையே இதில் சம்சயமில்லை. என்னுயிர் மேலானவாய், அடுகின்றன - பாதிப்பதே கருத்தாக எல்லாக்காலமும் அசையாமல் நின்று நலிவு செய்கின்றன.

5-ம் பாசுரம்

என்றுநின்றே திகழும்செய்ய
வீன்சுடர் வெண்மின்னுக்கொல்
அன்றி என்னுவியடும்
அணிமுத்தங்கொலோ வறியேன்
குன்றமெடுத்தபிரான் முறுவல்
எனதாவியடும்
ஒன்று மறிகின்றிலேன்
அன்னைமீர் எனக்குய்விடமே.

உரை:—என்றும் - எல்லாக்காலத்திலும், நின்றே திகழும் - ஒருபோது விளங்கி பிறகு மறையும் மின்னல்போலல்லாமல் எப்போதும் பிரகாசிக்கிற, செய்யச் சுடர் - சிவந்த காந்தியை, ஈன் - கொடுக்கின்ற, வெண்மின்னுகொல் - வெளுத்த மின்னலோ, மந்தஹாஸத்தை வெளியிடும் பிம்ப அதரங்கள் சிவந்த கலைகளை வீசுவதால் சிவப்புக் காந்தியை விளைவிக்கிற வெள்ளை மின்னலாக விவஹரிக்கின்ருர். அப்படிக் கில்லையேல் என் உயிரை வாங்கும் அழகான முத்து ஸரமோ? மலையைத்தூக்கிக் கோபாலர்களையும் பசுக்களையும் காப்பாற்றின என் முன் தோன்றுகின்ற கண்ணபிரான் புன்சிரிப்பு எனக்கு ஒன்றும் சொல்ல நிலமில்லை என் அன்னைமார்களேநான் இந்தநலிவைத் தப்பி ஜீவிக்கலாமிடம் ஒன்று மறிகிலேன்.

வில்லிபாரதம்

[244-வது பக்கத் தொடர்ச்சி]

வீமார்ச்சுனர்.

வீமன், இவன் கோபத்தின் உருவம்; மயிர்க்கால் தொறும் பொடிபட, கோபம் திரண்டதே இவனது ஆகமெனத் தோற்றும் ஓர் உருவம். கோபத்தின் பிண்டமெனவும் கூறலாம். கோபமுதிர்ச்சியால் நரம்புகளும் வேகமுற்றுச் செயலற்றுத் தம்பித்த நிலையில் இவனைக் கோபப் பிண்டமெனவே கூறக் கூடும். அத்தகைய தம்பன நிலையினின்றும் விடுபட்டதோர் நிலையிற்ருன்,

அருளாரும் தருமபதி யாகாதென்
றெமைப்பலகால் அடக்க யாமும்
இருளால்வெம் பெரிதிவடி வொளிப்பதுபோல்
அமர்புரியா திருக்கின் றேமால்
மருளால்மெய் மயங்கியொரு வலியுடையோர்
தமைப்போல மதத்த நீங்கள்
பொருளாக இருந்தனமோ நூற்றுவரும்
வருகவெதிர் பொருக வென்றான்.
பாஞ்சாலிக் காசவையில் பழுதுரைத்தோன்
உடலெனது படையா மேழி
போஞ்சாலின் நிணஞ்சோரியத் துணைவரொடும்
குலமாளப் பொருவன் யானே
வண்டாடுங் குழல்பிடித்து மாசளித்த
மன்னவன்தன் உடல் குருதி
உண்டாகங் குளிர்வதன்முன் இக்கரத்தால்
புனலுண்ணேன்.

என்று துளைீங்கிய சர்ப்பத்தைப்போல் சீறி வஞ்சினமும் வெஞ்சினமும் கடிவிரதமு மாகக் கொழுந்துவிட்டெரிகின்ருன். வஞ்சினத்தன் வீரமும், வெஞ்சினத்தின் கொடுமையும் உருவகத்தின் கடுமையும் ஒன்றையொன்று நிகர்த்து விளங்குவனவே. இன்னவாறு செந்தழல்போலக் கொழுந்துவிட்டெரிவது இவன் சினம். ஆனல் தழலின் வெம்மையும் உக்கிரமும் செம்மையுடன் நிற்பனவல்ல; வெம்மை முற்ற முற்றச் செந்தழலும் வெண்ணிறமடைவதே இயற்கையென்பது பூதசாத்திர உண்மை. அதுபோன்றே செந்தழலன்ன கோபம், முற்ற முற்ற அக்கோப முதிர்ச்சியினல் பிறப்பது வெண்ணகை. ஆதலின் சிறுகவிகள் கோபத்தின் தீக்ஷண்யத்தைச் செந்தழலன்ன கோபம் என்று வர்ணித்து நிறுத்திவிட்டாலும், மகா கவிகள் வெண்டழலன்ன கோபத்தையும் சித்தரித்து அந்நகையையும் பெறவைக்கவல்லவர். இக்கொள்கை நமது கவியரசருக்கும் உடன்பாடாமென்பதைப் பின்வரும், விசுவாமித்திர கோப வருணனை விளக்கும்.

என்றனனென் றுமுனிவோ டெழுந்தனன்
மண்படைத்தமுனி யிறுதிக் காலம் [மேல்
அன்றெனவா மெனவிமையோர் அயிர்த்தனர்
வெயில்கரந்த தங்கு மிங்கும்
நின்றனவும் திரிந்தனமீ நிவிக்தகொழுங்
கடைப்புருவம் நெற்றி முற்றச்
சென்றனவந் ததுநகையும் சிவந்தனகண்
இருண்டனபோய்த் திசைக ளெல்லாம்.
(கையடைப்படலம்).

என்று கோபமுதிர்ச்சியினல் தோன்றும் அக்கோப நகையையும் பெறவைத்தார். இவ்வுண்மையை நயது

கவிஞரும் உட்கொண்டு வீமசேனனது சித்திரத்தில், செஞ்சினத்தின் முதிர்ச்சிக்கு அறிகுறியான வெண்ணகையையும் சிறக்கத் தீட்டியுள்ளார். விராடநகரில் கீசகன் திரௌபதியை இச்சித்து அவளைக் கற்பழிக்க முயன்ற செய்தியை வீமனறிந்தபோது, ஏற்கெனவே துச்சாதனன்மேல் மாறாத வெம்பகையும் கனலும் கொதித்தெழும் வீமனுக்கு அச்செய்தி வெந்தபுண்ணில் வேலிட்டதுபோன்று இருக்குமல்லவா? அப்போது அவன்கொண்ட ஓர் சினத்தின் கொடுமையை என்னென்பது? ஆனால், அக்கோபமெல்லாம் ஒரு வழிச் சென்று நகைச்சுவை பொருந்தியதோர் செயலாக வெளிப்பட்டதென்னின் பீபத்ஸ ரசத்தின் முதிர்ச்சியிலும் ஹாஸ்ய ரசத்தைக் காணக்கூடும் என்னும் உண்மை வெளியாகின்றதல்லவா? இவ்வாறே சோகரசத்தின் கனிவிலும் ஹாஸ்யரசம் கலந்தேயிருக்கிறதென்பதுமறுக்கவொண்ணாதஉண்மை. நிற்க, அச்செயலோ யாதெனின், வீமன் திரௌபதியின் வேடம் பூண்டு, பூஞ்சோலையில் கீசகனை எதிர்பார்த்துநின்று, காம வேட்கையுடன் அவன் தழுவுகையில், ஒரேதழுவலாக அவனைத்தழுவி ஆவிபோக்க வேண்டும் என்னும் நினைவில் கோபத்தின் கொடுமையும், நகைச்சுவையும் ஒன்றுசேரக் காண்கின்றோம் அல்லவா?

வேறொரு சமயம், கிருட்டினனைத் தூதுபோக்க இளைஞருடன் தருமராசன் மந்திரம் சூழ்ந்தபோது, "எவ்வணமேனும் சமரசமெய்துமாறு முயன்றருள்; நாடு வேண்டு, நாடு கொடானேல் ஐந்தூர் வேண்டு; அவை கொடானேன் ஐந்திலம் வேண்டு; அதையும் மறுத்தால் அடுபோர் வேண்டு' என்னத் தன் மூத்தோன் கூறிய மொழிகள் வீமனுக்கு எத்தகைய சினத்தினை மூட்டியிருக்கவேண்டுமென்பதைச்சொல்லவும் வேண்டுமோ?

ஊனமிலான் மானமிலா துரைப்பதற்
கென்செய்வது

என்றும், [தோய்

அரவுயர்த்தோன் கொடுமையினும் முரசுயர்த்
நினதருளுக் கஞ்சினேனே.

என்றும்,

இவனுடனே பிறப்பதே நான்...

என்றும், வெங்கோப மொழிகளை யியம்பும்போதே, நமது உதடுகளைச் சற்றே பிரிக்கும் உரைகளையும் பயிற்றுகிறான்.

காணாள உனைவிடுத்த கண்ணில்லா
அருளிலிதன் காதன் மைந்தன்
தானாளும் தரணியெலாம் ஒருகுடைக்கீழ்
நீயாளத் தருவ னின்றே
மேனாள்நம் உரிமையறக் கவர்ந்தபெருந்
துணைவனுனை வெருவா வண்ணம்
வானாள வானவர்கோன் தன்பதம்மற்
றவன்தனக்கே வழங்கு வேனே.

என்பதிலுள்ள நகைச்சுவையுங் கருத்துட் கொள்ளத் தக்கது. பின்னோர் நாள், பதினேழாம் நாட்போரில் வஞ்சினம் நிறைவேறுங் காலம் நேர்ந்தது.

சோனா மேகம் பொழிவதுபோல்
துச்சா தனனும் தம்பியரும்
வானா டேற வழிதேடி
வருவார் போல வெருவாமல்
மேனாள் மொழிந்த வஞ்சினங்கள்
முடிப்பா னின்ற வீமனெதிர்
ஆனா வாளி தூவியடல்
வீமன் தன்னை வளைத்தாரே

என்றபடி வீமனெதிர் நண்ணினர். அப்போது வீமனது தோற்றம் சொல்லைக் கடந்ததென்று கருதியே போலும் கவிஞரும் அவனை ஒன்றும் வருணிக்காது விட்டனர். நமக்குத் தீது செய்பவர்களைவிட நாம் யாருக்குத் தீது செய்கிறோமோ அவர்களையே மிகுதியும் பகைக்கிறோம் என்பது நுண்ணிதின் ஆய்ந்து தெளியத் தக்கதோர் உண்மை. அது போன்றே, நமக்கு ஒருவர் தீது செய்தபோதும் அவரிடத்தில்லாத கோபம் நாம் அவருக்குத் திருப்பித் துன்பம் இயற்றும்போது தோன்றுதல் இயல்பு. அவ்வாறே தனக்குத் தீது நேர்ந்த அச்சூதுபோர் நாளையினும் பழிதீர்க்கும் இந்நாளில் வீமனது கோபமும் பகைமையும் மிகுதியாகத் தோன்றுவது இயல்பே. அக்கோபம் அவனது ஆகத்தையே பிளந்துவிடுமோ எனக் கருதத்தகும். அக்கோபம் எவ்வாறு வெளியேறுவது? பல நாட்களாகத் தான் உச்சரிக்காததும், கேட்கவும் பொறுக்கக் கூடாததுமான தனது பகைவனது நாமத்தைக் கடித்தமிழ்ந்து (உச்சரித்து) தான் அவனது கோபம் வெளியேறுவதற்கோர் வழியுண்டு போலும். 'துச்சாதனனே' என்று அவன் நாமத்தை இடியேறன்னக் கர்ஜித்துவிட்டு,

துச்சா தனனே உனைப்போலும்
சூரர் உளரோ சூரரெலாம்
மெச்சா நின்றார் வேத்தவையில்
மேனாள் நீ செய் விறலாண்மை
அச்சா ரிரதப் போர்க்குமுனக்†
கார்வே றெதிருண் டம்மவிரைந்
திச்சா போக மாகவிருந்
தின்றோ மறலிக் கிடுநாளே!
இன்றோ உன்றன் சென்னிதுணித்
திழிசெம் புனலிற் குளித்திடுநாள்
இன்றோ அழலின் உற்பவித்தாள்
இருளார் அளக முடித்திடுநாள்
இன்றோ தாகம் கெடநாவுக்
கிசைந்த தண்ணீர் பருகிடுநாள்
இன்றோ மொழிந்த வஞ்சினங்கள்
எல்லாம் பயன்பெற் றிடுநாளே.

வென்றே யவனி முழுதாளும்
வீரோ தயனின் தம்முனையும்
கொன்றே நாளை யமரரெதிர்
கொள்ளக் கடிதின் வரவிடுவேன்
இன்றே நீபோ யிடம்பிடிப்பாய்
எண்ணா எண்ணம் எண்ணிமன்றில்
அன்றே கலகம் விளைத்தென்றும்
அழியா வரசை யழித்தோனே.

என்று ஒலித்ததில் உள்ளம் கவர்ந்தெழுந் தோங்கிய கடுஞ்சினத்தின் வேகத்தையும், ரௌத்திரத்தையும் எடுத்துக் காட்டுவதில், நகையும் கூடக்கூட உதவிசெய்கின்றதல்லவா?*

---

† அச்சாரிரதப் போர்க்கு - அஞ்சாதவர்களாய் இரதம் கொண்டு செய்யும் போருக்கு.

* இவ்வாறே துரியோதனன் குளத்தில் தவமியற்றிக் கொண்டிருந்தபோது வீமன் அவனைத் தேடிச் சென்று அவனிடம் உரைத்த மொழிகளிலும், அனுமன் இந்திரசித்தன் யாகங்குலைந்து தக்களித்து நின்றபோது அவனிடம் கூறிய உரைகளிலும் நகைச்சுவை பொருந்திய கோபத்தைக் காணலாம்.

இத்துணைச் சினவெரியின்முன் துச்சாதனன் பஞ்சுபோலானான். முடிவில் வீமன் அவனது குருதியை எடுத்து உண்ண முயன்றபோது கண்ணன் அதனைத் தடுத்துக் குருதி கொப்பளித்தால் போதும் என்று இயம்பஅவனும் கொப்பளித்துவெஞ்சினமாறினன் என்ப. இவ்வாறு இவன்குருதிகுடிக்க முயன்றதைப் பற்றிச் சில மாதங்களுக்குமுன் மாடர்ன் ரிவியூவில் (Modern Review) ஒரு ஆசிரியர் எழுதியிருந்த கட்டுரை கண்ணிற்பட்டது. பாரதமானது கதைகள் பல அடர்ந்ததொரு உண்மை வரலாறென்றும், அதில் வரலாற்றுப் பகுதியைத் தெளிவதே கருமமென்றும் கொண்ட அந்தக் கட்டுரையாளர், பாரதப் போரென்பது நாகரீக மிகுந்த ஜாதியர்க்கும், காட்டுமிராண்டிகளுக்கும் இடையில்நிகழ்ந்த ஓர் போரெனவும், கௌரவர் நாகரீக மிகுந்தவர் என்றும், பாண்டவர் அத்துணை நாகரீகம் எய்தப்பெறாதவர் என்பதற்கு ஒரு பெண்ணை ஐவர் மணந்ததும், குந்தி பல ஆடவரைப் புணர்ந்ததும், வீமன் குருதி குடித்ததுமே சான்றெனவும் கூறுவர். மேலும் தொடர்ந்து வாதிப்பார் அவர், "ஒரு பெண்ணைப் பலர்மணப்பது ஹிதியர்களது வழக்கம். மனிதர் குருதியைக் குடிப்பதும் அவர்களது சரித்திரங்களில் நாம் காண்கிற விஷயங்கள். நமது தேசமக்கள் எவரும் இவ்வாறு மனிதர்தம் குருதியைக் குடிக்கின்ற மிலேச்சப் பான்மையை என்றும் எய்தியவரல்லர். ஆதலின் கௌரவ பாண்டவப் போர் நாகரீகமிகுந்த சுதேச ஜாதியர்க்கும், அத்துணை நாகரீகம் எய்தப்பெறாததொரு மிலேச்ச ஜாதியர்க்கும் நடந்த போராகும்' என்பர். இவரது கூற்றில் யார் நாகரீக மிகுந்தவர் யார் அல்லர் என்பதைப் பற்றிய விவாதத்தினை நாம் எடுத்துக் கொள்ள வேண்டுவதில்லை. அதனைப்பற்றிப் பின்னால் கருதுவோம். ஆனால் வீமன் துச்சாதனனது குருதி குடித்ததுகொண்டு பாண்டவர் மிலேச்ச சாதியினர் என்று அவர் மிகையாகக் கூறியதையே ஆராய்வோம். ஒரு சிறு நிகழ்ச்சியைக் கொண்டு ஒரு கொள்கையை விரிப்போர் அந்நிகழ்ச்சியைப் பற்றிச் சரிவர ஆராய்தல் இன்றியமையாதது. நாகரீகமற்ற மக்களிடத்தில்தான் அத்தகைய குருதி குடிக்கும் வழக்கம் உண்டென்று கழறும் அச்சரித்திரகாரர் நாகரீக மக்கள் வாழ்க்கையில் அத்தகைய செயல்களே நடந்ததில்லையென்று சரிவர ஆராய்ந்து தெளிதல் வேண்டுமல்லவா? மற்று, உண்மையில் அதைப்போன்றதொரு சம்பவம் நாகரீக மக்கள் வாழ்க்கையிலேயே நடந்ததென்பதைச் சரித்திர பூர்வமாக அறிகிறோம். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் பிரான்ஸ் தேசத்தில் பெரும் புரட்சி யொன்று நேர்ந்து, பலகாலும்பேதுற்றகுடிமக்கள் செல்வவந்தர்களை வென்று, அவர்களைச் சிறிதேனும் கண்ணோட்டன்றி ஒருவரையும் தப்பவிடாமல் தூக்கிலிட்டனர். அக்காலத்திலேயே, அழகிற்கும் நாகரீகத்திற்கும், மேனாடுகளில் பெயர்பெற்று விளங்கிய பாரிஸ்மாநகரமானது ஓரே கொலைக்களமாக விளங்கிற்று. அப்போது ஆயிரக் கணக்காகக் கூடியிருந்த அம்மக்கள் முன்னிலையில் சடக்கென ஒருவன்தோன்றி, தன் ஒருகையில் கண்ணாடிப் பாத்திரமொன்றையேந்தி, மறு கையினால் சிவந்து, குருதி சொட்டும் ஒரு பொருளை அப்பாத்திரத்துள் பிழிந்து உண்டு ஆகம் குளிர்ந்தானாம்; அவ்வாறு அப்பாத்திரத்துள் பிழிந்தது அவனது மகளைக் கற்பழித்த புல்லனது இதயம் என்று ஸ்டாப்போர்ட் பூருக்ஸ் (Stopford Brookes) தமது நூலொன்றில் எழுதியிருக்கிறார். இந்நிகழ்ச்சியும், மேலே பாரதத்தில் நாம் கண்ட நிகழ்ச்சியும் காலத்தாலும் இடத்தாலும் ஒருவாறு மாறுபட்டனவேயன்றி, சந்தர்ப்பத்தாலும் காரணத்தாலும் பெரிதும் ஒற்றுமைப் பட்டவைகளே. இரண்டிடங்களிலும் கற்பை யழித்ததும் அழிக்க முயன்றதுமே ஏதுவாக அமைந்துநின்று, நரபலியுகக்கும் அச்செயலைத் தூண்டினவாம். இவ்வாறு ஏதுவாகநின்றசெயல் கற்பினை யழிப்பதாயிருப்பின், நாகரீகமுள்ளவரேனும் அற்றவரேனும், அத்தகைய கடுமையானதொரு எண்ணம் தோன்றாதொழியாது. மேலே ஷேக்ஸ்பியர் ஆராய்ச்சியாளராகிய பூஜ்யர் புரூக்ஸ் அவ்வரலாற்றைக் கூறியுள்ள பிரமேயம் யாதெனின்; ஷேக்ஸ்பியரது நாடகமொன்றில் பியட்ரிஸ் (Beatrice) என்னும் கதாநாயகி ஒருத்தி, தனது அருமந்தன்ன அம்மான் மகளைக்காதலித்து அவனை மணம்புரிந்துகொள்ளக்கோயிலுக்குச் சென்று அங்கே விவாகமாகுமுன் அவள் கற்பழிந்தவள் என்று பலரையும் சான்றுகூறி அவளைக்கழித்து அவமானப்படுத்தியபோது, 'என் தங்கை மீதுவீண்பழி சுமத்திய அக்காதகன் தன் வன்னெஞ்சம்என் கையில் அகப்படுமாயின்' என்று கூறிப் பல்லைக்கடிக்கிறாள்; அவ்வுரையை ஆராய்கையில், கற்பினை மக்கள் தம் முயிரினும் மேலாக ஓம்புவரென்றும் அதற்குப் பங்கம் நேர்ந்தபோது எத்தகைய கொடிய எண்ணங்களும் அவர்கள் மனதில்எழுவதுஇயல்பென்றும், அதுதான் மனிதரது ஜீவதத்துவமென்றும் அப்பூஜ்யர் உண்மை யறிவினோடும் பெறவைத்தார். ஆதலின் வீமன் மேலே குருதியைக் கொப்பளிக்காமல், குடித்தேவிட்டிருந்தாலும் அவன்மீது நம்இரக்கம்பெருகுமேயன்றி, ஒருவிதமானபழியும் அவனைச் சாராதென்பதும் திண்ணம்.

ஆனால் ஐவரில் வேறொருவரும் அத்தகைய வெஞ்சினம் கொள்ளாதபோது இவனொருவனே தழலாய் எரிந்தானே யெனின், வீமன் இயற்கையாகவே வெங்கோபி என்பதல்லாமல், பாஞ்சாலியை அவனைப் போல் வேறொருவரும் நேசிக்கவில்லை என்பதையும் கருதவேண்டும். கிரீடிக்கோ திரௌபதியைத் தவிர எண்ணிறந்த மாதர்களிருந்ததனால், 'ஒருவரிடத்தே இடையறாத நேசம்வைத்து, அதனிற்கு இடையூறு நேர்ந்தபோது வாழ்க்கையெல்லாம் துன்பமயமாக மூடப்படும் கதி இவனுக்கு நேர இடமில்லை' என்று முன்னர்க் கூறினேன். ஆனால் வீமனுக்கு அத்தகைய துன்பகதி நேர்ந்து, கோபமும் தாபமும் அவனது ஆகத்தை உடைக்கும் அந்நிலை நமது இரக்கத்தையும் பெருக்குகிறது. வேறு பல விடயங்களிலும் அவன் நமது இரக்கத்திற்கு உரியவனாகின்றான். விசயனைப் போல் அவன் செருக்கு மிகுந்தவனல்லன்; கண்ணன்மீது அளவில்லாத பத்திமை பூண்டவன். மற்றும் அவனது சுபாவம் மிக்க எளிதும் கரவில்லாததுமாம். இவ்விருவர் குணபேதங்களைக் கிருட்டினன் தூதுச்

சருக்கத்தில் தருமராசன் இளைஞருடன் மந்திரம் இருந்தபோது அவர்கள் முறையே கூறிய வாசகங்களினின்றும் தெளியலாம். தருமத்துக்கொப்பதோர் முடிவை யுதிட்டிரன் வெளியிட்டதும், வஞ்சினங்கள் பொய்த்து நியாயமும் தவறிவிடுமேயென்று அஞ்சிய வீமன், மிக்க சினங்கொண்டு நாத்தோமில் உரைபதறிக் கதுமென வெழுந்து, "ஞாலமெலாம் பூத்தோனே பூந்தவிசில் பூவைபுணர் மணிமார்பா புன்மை யாவும் தீர்த்தோனே" என்று எடுத்த எடுப்பிலேயே கண்ணனைப்போற்றி வந்தனம் ஆற்றித் தனது எளிய சுபாவத்தையும் பத்திமையையும் காட்டுகின்றான்; பின்னர்த் தருமனைப்பற்றித் தனது மனத்திலுள்ள வற்றைக் கரவிலாது மிக்குணர்ச்சியுடன் எடுத்துரைத் திறுதியில்,

மலைகண்ட தெனவென்கை மறத்தண்டின்
வலிகண்டும் மகவான் மைந்தன்
சிலைகண்டும் மற்றிருவர் திறல்கண்டும்
எமக்காகத் திருமால் நின்ற
நிலைகண்டும் இவள்விரித்த குழல்கண்டும்
இமைப்பொழுதில் நேரார் தம்மைக்
கொலைகண்டு மகிழாமல் அவர்குடைக்கீழ்
உயிர்வாழக் குறிக்கின் றாயே.

என்று கூறியதில், தனது வீர மொன்றையே மிகுதியும் பாராட்டிப் பேசாது, தன் துணைவரது ஆற்றலையும், மைத்துனன் அருளையும், பாஞ்சாலியின் துயரத்தையும் உணர்ச்சியுடனும் ஆவேசத்துடனும் எடுத்தியம்புகிறான். ஆனால் அவனுக்குப் பின்னர் விசயன் எழுந்து பேசியதில்,

அக்காலம் பொறுத்தவெலாம் அமையாமல்
இன்னமிருந் தறமே சொன்னால்
எக்காலம் பகைமுடித்துத் திரௌபதியும்
குழல்முடிக்க இருக்கின் றாளே

என்று பொதுவாகத் திரௌபதியின் துயரத்தைப் பற்றிக் கூறியபின்,

தேவராயி னும்பழைய தயித்தியரா
யினுமற்றுஞ் செப்பு கின்றோர்
யாவராயினு மெதிர்ந்தோ ருயிருண்ணவென்
றிருப்பதுவே என்கை வாளி

என்று சிறப்பாகத் தன் வில்லாற்றலையே புகழ்கின்றானேயன்றி மரியாதைக்காவது துணைவர்களுடைய ஆற்றலைப் புகழ்ந்தானில்லை; மற்றுத் தனது அம்மான்சேயின் அருளையேனும் புகழ்ந்தானல்லன். இவ்வாறு இவர்கள் குண விசேஷங்கள் நுண்ணிதின் பேதிக்கப்பட்டு விளங்குகின்றன. ஆனால் இவ்விருவரும் ஓருணர்ச்சியின் இருகூறுகள் என்றுஇவர்களுக்கிடையேயுள்ள ஐக்கியத்தையும்கூறலாம். வீமனது குணம் கோபமெனின் விசயனது குணம் செருக்கு. வீமன் யாருக்கும் பின்னிடாத வீரனனில் விசயன் ஒருவருக்கும் தோலாத வென்றியன்; வீமனது குணம் பக்தி யெனின், விசயனது அதிட்டம் பக்தியின் பயனை எய்தப் பெறுதலாம்.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தா காண்டம்—10. கிட்கிந்தைப் படலம்

[277-வது பக்கத் தொடர்ச்சி]

ஆற்றுதார்க் கன்றே சினம்.

இயற்றியதொன்றும் நல்லோர்க் கியல்பல தென்று இளையவள்ளல் அனுமனுக் கெடுத்தியம்பினன்.

தோன்றலஃ துரைத்த லோடும்
மாருதி தொழுது தொல்லை
ஆன்றநூ லறிஞ போய
பொருண்மனத் தடைப்பா யல்லை
ஏன்றது முடியே மென்னி
னிறத்துமித் திறத்துக் கெல்லாம்
சான்றினி யறனே போர்துன்
றம்முனைச் சார்தி யென்றான்

[இலக்குவன் அவ்வாறு சொன்ன அளவில், அனுமன் அவனை வணங்கி, பழமையான சிறந்த நூல்களை யறிந்தவனே, கடந்துபோனவைகளை இன்னும் கருத்தில் வைக்காமலிருப்பாயாக. சீதையைத் தேடித்தருவதாக நாங்கள் ஏற்றுக்கொண்ட காரியத்தை முடிக்காமற் போவோமானால், உயிரைவிட்டுவிடுகின்றோம். இவைகளுக்கெல்லாம் இனித் தருமமே சாட்சியாகும். உள்ளேவந்து உன் தமயனுக்குஒப்பான சுக்கிரீவனைச் சேர்வாயாக, என்றான்]

சொல்லின் செல்வனும் அவ்வனுமன் அழைத்தவாறே இலக்குவனும் உள்ளேசெல்ல இசைந்தனன். அவ்வளவில், இவ்விளவல்தன் சீற்றத்தைத்தணித்துச் சுக்கிரீவனைக்காப்பதற்கு இணங்கிய பெருமாட்டியாம் தாரை இனித் தான் வைகிடம் ஏகலா மென்னவுன்னி,

அயில்விழிக் குமுதச் செவ்வாய்ச்
சிலைநுத லன்னப் போக்கின்
மயிலியற் கொடித்தே ரல்குல்
மணிநகைத் திணிவேய் மென்றோள்
குயின்மொழிக் கலசக் கொங்கை
மின்னிடைக் குமிழோர் மூக்கின்
புயலியற் கூந்தன் மாதர்
குழாத்தொடுந் தாரை போனாள்

[வேல்போன்ற கண்களையும் ஆம்பல் மலரை யொத்த சிவந்த வாயையும், வில் அனைய நெற்றியையும், அன்னத்தின் நடையையும், மயிலை நிகர்க்கும் சாயலையும், கொடி கட்டிய தேரை ஒக்கும் அல்குலையும், முத்து அன்ன பற்களையும், வலிய மூங்கில் போலும் தோள்களையும், குயிலின் மொழியையும், பொற்கலசத்திற்கு ஒப்பான முலைகளையும், மின்னல் அன்ன இடையையும், குமிழ மலரின் அழகுடைய மூக்கையும், மேகம்போன்ற கூந்தலையும், உடைய, மாதர்கூட்டத்துடனே தாரையானவள் தனது அந்தப்புரத்திற்குச் சென்றனள்.]

தாரை அகன்றபின், "உன் தந்தைக்கு என் வரவைச்சொல்" என இலக்குவன் ஏவியபடி அங்கதனும் போனான்.

போனபின் றாதை கோயில்
புக்கவன் பொலங்கொள் பாதம்
தானுறப் பற்றி முற்றுந்
தைவந்து தடக்கை வீரன்
மானவற் கிளையோன் வந்துன்
வாயிலின் புறத்தான் சீற்ற
மீனுயர் வேலை மேனும்
பெரிதிது விளைந்த தென்றான்

[அவ்வாறு சென்றபின், நீண்ட கைகளையுடைய வீரனாகிய அங்கதன் தன் சிற்றப்பனாகிய சுக்கிரீவனது அரண்மனையை அடைந்து, அவனது பொன்போன்ற பாதங்களைப்பிடித்து முழுவதும்தடவி அவனைத் துயிலெழுப்பி, 'இராமனுக்கு இளையவன் வந்து உன்வாயிலில் வெளியே நிற்கின்றான். அவனது கோபம் மீன்கள் துள்ளுங் கடலைக் காட்டிலும் பெரியதாம். இப்பொழுது சேர்ந்திருப்பது இது' என்றான்]

பருகிய விழிகள் குழியுட் சுழன்றுசுழன்று நெற்றியுள்செருக, அவைகளைப்பறித் தொருநிலையில் அரிதின் நிறுத்திய சுக்கிரீவன், தான் செய்திருக்கவேண்டிய கருமமுங் காலமும் கள்ளினுள் மூழ்கிவிட்டன வென்ப தறியாமல், "நாம் ஒன்றுங் குற்றம் செய்திலோமே, நம்மீது இலக்குவன் கோபங்கொள்வதற்

குக் காரணம் என்ன'' என்று கேட்க, அங்கதன் அறிவும் அமைதியும் துணிவும் உடைய மொழிகளால் விளேந்து நின்றதை விளம்பலுற்று,

இயைந்தநா ளெந்தை நீசென்
    றெய்தலே செல்வ மெய்தி
வியந்தனே யுதவி கொன்ருய்
    மெய்யலே யென்ன வீங்கி
உயர்ந்தது சீற்ற மற்ற
    துற்றது செய்ய முற்றும்
நயந்தெரி யனுமன் வேண்ட
    நல்கின னம்மை யின்னும்

[என் தந்தையே முன் உடன்பட்ட நாளில் நீ போய்ச் சேரவில்லை யென்றும், செல்வத்தை அடைந்து செருக்கிஞயென்றும், செய்தநன்றியை மறந்தாய் என்றும், உண்மையற்றவன் என்றும், இலக்குவனுக்குக் கோபம் ஓங்கியெழுந்தது. அப்பொழுது நயமுடையவைகளே முழுவதும் அறிந்த அனுமன், அக்கோபத்தைத் தணிப்பதற்கு உரியவைகளேச் செய்து பிரார்த்திக்க, அவ்விலக்குமணன் இன்னும் நாம் உயிரோடிருக்குமாறு விட்டான்]

என்றனன். இலக்குமணன் உற்ற சீற்றத்தின் காரணமும், அதன்போக்கும் எவ்வளவில் முடிந்திருக்குமென்பதும், ஆயினும், அது தணிந்துளதென்பதையும் தகவுறமுதலிற் கூறிய அங்கதன், இனி இடை நிகழ்ந்தவற்றையும் இயம்புவாஞகி, வானரவீரர் மலேகளேயடுக்கி வாயிலேக்காத்துப் போரிடற் கமைந்து நின்றபெற்றியும், இலக்குவன் கமலத்தாள்கள் தீண்டா முன்னம் அவை துகளெனப் பிதிர்ந்த விந்தையும், அதுகண்ட அரிக்குலத்தனிகம் அலமந்து போனவிடந் தெரியாமல் புக்கொளித்த செய்கையும், அந்நிலேயில் தன் அன்னேயாம் தாரை ஏந்திழை ஆயத்தோடும் இளவலே வழியெதிர் விலக்கிநின்று, வானரசேனேயை வருவிக்கத் தூதுவர் சென்றுளரென்றதைச் செப்பி அன்னவன் சீற்றத்தை மாற்றிய மேன்மையும் யாவும் சுக்கிரீவனுக்குத் தெரியச் சாற்றிஞன்.

இதனேக் கேட்டனன் சுக்கிரீவன். தாம் ஒன்றுஞ் செய்யக் கையலாகாத நிலேயில் இருந்தவர், விளேந்ததொன்றை விளம்பக் கேட்குமளவில், "என்னிடத்தில் ஏன் இதனே முன்னரே சொல்லவில்லே" என்னச் சால முனிவுகொள்ளல் இயற்கை. முன் அங்கதன் சென்று சொல்லலுற்றபோது அதனேக் கேட்பதற்கும் இயலாமல் மயங்கிய உணர்வினஞ யிருந்த இந்தச்சுக்கிரீவன் இப்பொழுது, அன்னதோர் கேள்வியே அங்கதனேக் கேட்டானென்பதைக் கம்பர்,

சொற்றலு மருக்கன் ரேன்றல்
    சொல்லுவான் மண்ணின் விண்ணின்
நிற்குரி யார்கள் யாவர்
    அனேயவர் சினத்தி னேர்ந்தால்
விற்குரி யாரித் தன்மை
    வெகுளியின் விரைவி னெய்தின்
எற்குரை யாது நீரீ
    தியற்றிய தென்கொ லென்ருன்

[அவ்வாறு அங்கதன் சொன்னவுடன், சூரியகுமாரஞன சுக்கிரீவன், ஒன்று சொல்லப்புகுந்தவஞகி, அங்கதனே, அறிவில் உனக்குச் சமானமென்று சொல்வதற் குரியவர் யாருளர். அப்படியிருந்தும், அவர் கோபங்கொள்ள நேர்ந்து விற்ரெழில் வல்லவஞன இலக்குவன் இங்ஙனம் சீற்றமுடன் வந்தான் என்ருல், அதனே எனக்குத் தெரிவிக்காமல், நீங்களே இவ்வாறெல்லாம் செய்தது என்ன காரணம் பற்றியோ, என்று வினவினன்.]

என்று இன்னதன்மையோர் இயற்கைக்கு இணங்க அரிதின் எடுத்துக்காட்டலாகின்ருர். தம்பால் குற்றமுடையவர்களே, பிறர்பால் என்றும் குற்றங்கள் காண்பவராவார்; தாமொன்றும் ஆற்ற மாட்டாதவர்களே, பிறர் ஆற்றியதிற் குறைகண்டு அதனினுஞ் சிறப்பாகத் தாம் ஆற்றியிருப்பாரென்னச் செருக்குவார்; "என்னிடத்தில் ஏன் இதனே முன்னரேசொல்லவில்லே" என்னும் இது உலகத்தில் நடமாடுகின்ற முடப்பேச்சுக்களில் முதன்மையானது. இதற் கெதிராக அங்கதன்,

உணர்த்தினேன் முன்னர் நீயஃ
    துணர்ந்திலே யுணர்விற் றீர்ந்தாய்
புணர்ப்பதொன் றின்மை நோக்கி
    மாருதிக் குரைப்பான் போனேன்
இணர்த்தொகை யீன்ற பொற்ரு
    ரெறும்வலித் தடந்தோ ளெந்தாய்
கணத்திடை யவனே நீயுங்
    காணுதல் கரும மென்ருன்

[பூங்கொத்துக்களால் தொடுத்த அழகிய மாலேயை அணிந்த மிக்க வலிமை பொருந்திய பெரிய தோள்களேயுடைய என்தந்தையே, இலக்குவன் வந்திருப்பதை நான் உனக்கு முன்னரே தெரிவித்தேன், அப்போது நீ உணர்வற்றவஞகக் கிடந்தாய், அதஞல், நான் சொல்லியதை நீ தெரிந்துகொள்ளவில்லே. எனின், நான் செய்யக்கூடியது வேறு ஒன்றும் இல்லாமை கண்டு, இச்செய்தியை அனுமனுக்குச் சொல்லச் சென்றேன். இனி இந்நிமிடமே நீயும் அவ்விலக்குவனேச் சென்று காணவேண்டியது கருமமாகும், என்ருன்]

இதனேக் கேட்டவுடன் சுக்கிரீவன் தன் குற்றத்தைத் தானே உணர்ந்துகொண்டனன். உணர்ந்துகொண்டு,

உறவுண்ட சிந்தை யானு
    முரைசெய்வா னெருவர்க் கின்னம்
பெறலுண்டே யவரா லீண்டி
    யான்பெற்றபே ருதவி யுற்ற
திறலுண்டோ வென்னிற் றீர்வா
    னிருந்தபே ரிடரை யெய்லாம்
நறவுண்டு மறந்தேன் காண
    நாணுவன் மைந்த வென்ருன்

[மிகுதியும் குடித்திருந்த மனத்தினஞகிய சுக்கிரீவனும், அங்கதனே நோக்கிச் சொல்வாஞகி, மைந்தனே, இராமபிராஞல் இப்பொழுது நான் அடைந்துள்ள பேருபகாரம், மற்ரெருவரால் இனிப் பெறுதல் கூடுமோ; கிடைத்த இச் செல்வத்தை அழித்துக்கொள்வதும் தக்கதோ! என்ஞல் நீக்கிக்கொள்ளும்படி காத்திருந்த இராமனுடைய பெருந் துன்பங்களே யெல்லாம், மது உண்டு கிடந்தமையால்மறந்துபோயினேன். இனி இலக்குவனேப் பார்ப்பதற்கும் நாணுகின்றேன், என்ருன்]

இவ்வளவேனும் இவனுக்குச் சிந்தை தெளிந்ததெனினும், இன்னும் சிறிது அம்மதுவின் மயக்கந் தங்கியிருக்கின்றதென்றே எண்ணல் வேண்டும். இல்லேயேல், இராமனிடத்திலிருந்து தான் பெற்ற பேருதவியைப் பற்றி வாலியின் சேயிடமோ பேசியிருக்க மாட்டான்.

காலரா மருந்து
IDL வின்க்யூர்
ரூ. 1.8.0
ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்
கெர்ப்பாசய டானிக். ரூ. 2.00
சூதக டானிக். ரூ. 1.80
ஏமாற வேண்டாம்
நேரில் பெற்றுக்கொள்க
ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்
ஸ்ரீகர கஸ்தூரிமாத்திரை. 0-4-0
கோரோஜனை .. . 0-6-0
பாலசஞ்சீவினி . 0-4-0
ஹிலஸுதா டானிக் ரூ 1
40 நாட்கள்
உபயோகப்
பாக்கெட்
அணு ஒன்று
IDL ச்யாவனப்ராச IDL பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம் பாக்கெட் IDL 61, மேடிகேடட் டப்பி
ஜவரேக்
IDL ச்யாவனப்ராச
சிறந்த டானிக்
சத்வைத்யசாலா - நஞ்சன்கூடு
போலிக்ள் இருப்பதால் வீதிகளில் வாங்க வேண்டாம்

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

முக வசீகரம்:—தினந்தோறும் சிறிது வெண்ணெயையும் பாலேயும் முகத்தில் தடவிவந்தால் முகத்தில் பருக்கள் வெடிப்புக்கள் முதலியன உண்டாகாமல் முகம் என்றும் இளமையா யிருக்குமென்று பென் புரோக்கைச் சேர்ந்த நூறுண்டு மனிதர் ஒருவர் கூறுகிறார்.

* * *

தொடர்ந்துவரும் துன்பம்:—அமெரிக்கா ஜார்ஜியாவில் இதுவரை சுகமாயிருந்துவந்த நாதன் ப்ரவுன் என்பவருக்குச்சமீபத்தில் சனிதிசை தொடங்கியது. அவர் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தபொழுது திடீரென்று ஒரு குளவி கொட்டியது. அந்த வலி பொறுக்க முடியாமல் வீட்டுக்கு ஓடினார். வழியில் ஒரு பச்சைப்பாம்பு அவரைக் கடித்தது. உடனே வைத்தியசாலைக்கு ஓடினார். இடையில் ஒரு நாய் கடித்தது. நாய்க்கடியால் வெறிபிடித்து அவர் வைத்தியசாலையில் குணமடைந்து வருகிறாராம்.

* * *

அதிசயக்கிளி:—ஸ்ரீ நகரைச்சேர்ந்த பட்டாணியர் ஒருவர் ஒரு அதிசயக்கிளி வைத்திருக்கின்றார். இந்தக் கிளி அபார புத்திசாலித்தன முடையதாயிருப்பதோடு அதி நமான விலையுமுள்ளதாம். இந்தக்கிளி பாரசிகம், அராபி, புஷ்டு முதலிய அநேக பாஷைகள் பேசுகின்றதாம். இந்தக் கிளியை இப்பொழுது ஒரு ஜமீன்தார் வாங்கியிருக்கின்றார். இந்தக் கிளி அநேக பாஷைகளைப் பேசுவதோடு வியாதிகளுக்கு யூனனி முறைப்படி மருந்தும் சொல்லிவருகிறதாம். கொரான் வாக்கியங்களை மிக இனிமையாகவும் தெளிவாகவும் கூறுகின்றதாம். இந்தக் கிளியின் சாமர்த்தியத்தை அநேகர் வியந்து போற்றிவருகின்றனர்.

* * *

Indo-Commercial Bank, Ltd.,
Mayavaram.
Capital, Reserves, etc., as at 30th August 1935 : Rs. 10,62,245.
BRANCHES :—
Madras Office :—
107, Armenian Street.
Bazaar Branch :—
260, China Bazaar Road.
Madura, Karaikudi, Virudhunagar, Tuticorin, Kumbakonam, Tiruvarur, Erode, Vizianagaram, Pudukottah, Tinnevelly, Salem and Trichinopoly.
SUB OFFICES:—
Shiyali, Chidambaram, Conjeevaram and Tanjore.
All kinds of Banking Business undertaken on terms which may be ascertained on application.
S. N. N. SANKARALINGA IYER,
Managing Director,
107, Armenian Street, Madras.

பெண் கல்வி:—பம்பாய்ப் பெண்கள் சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவின்போது சர். சி. வி. ராமன் பேசியிருப்பதாவது:—

நம் இந்திய தேசம் அடிமைத் தளையி லிருப்பதற்குப் பெண்கல்வியில் அசிரத்தையாயிருப்பதே காரணமென்று சொல்லலாம். தேச வாஞ்சையுள்ள எவனும் பெண்கல்வி விஷயத்தில் அதிக சிரத்தையுள்ளவனாயிருப்பானென்பதில் ஐயமில்லை. நம் இந்தியதேசம் கலைகளிலும் மற்ற அறிவுத் துறைகளிலும் புராதனப் பெருமை வாய்ந்தது. இந்தப் பண்டைப்பெருமையை நிலைநாட்ட நாம் பெண்கள் கல்விவிஷயத்திலும் சீர்திருத்த விஷயத்திலும் அதிகக் கவனஞ் செலுத்துதல் வேண்டும். மூடப்பழக்கங்களும் அறியாமையும் குடிகொண்டுள்ள எந்தத்தேசமும் முன்னேற்றமடைய முடியாது. சிறுவர், சிறுமிகளுக்குத்தேகபலத்தையளிப்பதோடு அவர்கள் அறிவு முதிர்ச்சிக்கும் காரணமாயிருப்பவள் தாயான பெண்ணே யாவாள். அவர்கள் ஒழுக்கங்களுக்கும் தாயே காரணமாகின்றாள். ஆகையினாலேயேசிறுவர்சிறுமிகளுக்குத்தாயாக விளங்கப்போகின்ற பெண்தெய்வங்களுக்கு நல்ல கல்வி போதிப்பது நமது தலையாய கடமை யாகும்.

ஆசிரியர் குறிப்பு:—உள்ளொன்றும் வைக்காமல் புறமொன்று பேசுவதற்கு இது, பெரிய இடத்தினின்று கிடைத்திருக்கின்ற ஒரு நல்ல உதாரணம்.

* * *

ரோஜாத்தோட்டம்:—அமெரிக்காவைச் சேர்ந்த டொபேகா நகரசபையார் ஒரு அழகிய ரோஜாத் தோட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சுமார் 10 ஏக்கர் உள்ள இந்தத்தோட்டம் ரோஜா மலர்களினாலேயே அழகுபெற்றுவிளங்குகிறது. 15000 ரோஜாச் செடிகள் வரை இத்தோட்டத்தில் தினந்தோறும் மலர்கின்றன. இந்தத்தோட்டம் பொதுமக்களுக்கு இரவிலும் பகலிலும் திறந்துவைக்கப்பட்டிருக்கிறது. இரவில் கணக்கற்ற மின்சார விளக்குகளுடன் இந்த அழகிய ரோஜாத்தோட்டம் கண்கவரும்வனப்பைத் தருகின்றது. பொதுமக்கள் எல்லோரும் இந்த இன்பத்தை அங்கு அடைந்துவருகிறார்கள்.

* * *

ஆறடிக் கப்பல்:—கானடாவில் ஒருவர் ஆறடிக் கப்பல் ஒன்று செய்திருக்கிறார். அந்தக் கப்பலுக்குப் பெரிய கப்பல்களைப்போன்ற சிறு இஞ்சின்களைப் பூட்டிக் கானடா சமுத்திரத்தின் வழியாக அமெரிக்காவுக்குப் போய்க்கொண்டிருக்கிறார். அந்தக் கப்பலுக்குப் பாய்களும்பாய்மரங்களு மிருக்கின்றன. அது வேகமாக ஓடும் சக்தி பெற்றிருக்கிறது. அந்தக் கப்பலின் அடியில் இரு சைக்கிள் சக்கிரங்களை இணைத்திருக்கிறார். இதனால் கப்பல் புரண்டு விடுவதற்கு மார்க்கமில்லை. எவ்வித பெரிய சமுத்திர அலைகளையும் சமாளித்துக்கொண்டு வருகிறது.

சிறந்த பலவிருத்தி ஔஷதம்
சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனும்! “காம சாஸ்திரம்” இனும்!!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)